REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 ஓகஸ்ட் 25 வியாழக்கிழமை

1932 - 2022

வரு. 90 இல. 200 | Thursday 25, August, 2022 | 12 பக்கங்கள் | 40/-




## உணவுப் பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கையும்

### மிகவும் வருத்தமான விடயமென அமைச்சர் மஹிந்த அமரவீர கவலை



உணவுப் பொருட்களின் விலையேற்றம் அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தில் இருப்பது தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர வருத்தம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அரசாங்கமும் பொதுமக்களும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும், இதற்கு தீர்வு காண்பதற்கு வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை 04

## ஜப்பானிய தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகிக்கும் (Mizukoshi Hideaki) இடையிலான சந்திப்பொன்று, நேற்று (24) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜப்பானியப் பேரரசர் ஹிரோனோமியா நரஹிட்டோவின் (Hironomia Narahito) வாழ்த்துகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்த ஜப்பானியத் தூதுவர், ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன, "சென்ட் பிரான்சிஸ்கோ சமாதான மாநாட்டில்" உரையாற்றி, 70 ஆண்டுகள் நிறைவடைவதை 04

## IMF பிரதிநிதிகள் குழுவினர் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு

### நாளை மற்றுமொரு கலந்துரையாடல்



இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிக்குத் தீர்வு வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்பகட்ட கலந்துரையாடலொன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று (24) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியின் தற்போதைய நிலைமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாளை (26) வெள்ளிக்கிழமை இந்தக் கலந்துரையாடலின் மற்றொரு சுற்றுக் கலந்துரையாடலை நடத்துவதற்கும், எதிர்காலத்தில் மத்திய வங்கி அதிகாரிகளுடன் தொழிநுட்ப விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் பீட்டர் புரூபர், பிரதித் தலைவர் ஓசைரோ கொசையிகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டுபாகன்ஸ் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உட்பட பலர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

### அதிகரித்துள்ள மண்ணெண்ணெய் விலைக்கு தீர்வாக

# கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸின் கோரிக்கைக்கு ஜனாதிபதி ரணில் இணக்கம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

### கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதியுடன் சந்தித்து கலந்துரையாடவைக்கவும் விரைவில் அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பை கடற்றொழிலாளர்கள் சமாளிக்கும் வகையில், நிவாரணம் வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலான சந்திப்புக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதியின், ஒருங்கிணைப்பாளரின் ஏற்பாட்டில் நாடு முழுவதுமுள்ள கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று (24) நடைபெற்றது.

இச்சந்திப்பில் கருத்து தெரிவித்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், 04

## ஜனாதிபதி ரணில் உலகின் வலிமையான தலைவர் 03



## பாராளுமன்றில், 30 ஆம் திகதி இடைக்கால வரவு செலவு திட்டம்:

### நிதி அமைச்சரான ஜனாதிபதியினால் சமர்ப்பிப்பு

### ஆக. 30 மற்றும் செப்.1,2 ஆம் திகதிகளில் விவாதம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இடைக்கால வரவு செலவுத் திட்டம் நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், இம்மாதம் (30) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது. பிற்பகல் 02 மணிவரை வரவு செலவுத் 04

## EPF பெற்றுக் கொள்வதற்கு இனி வரிசையில் நிற்க தேவையில்லை

### 1958 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள கோரிக்கை

ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக் கொள்வதற்காக தற்போது காணப்படும் நீண்ட வரிசைக்கு எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழில் அமைச்சர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் பதிவினை 04

### பால்மா, பால் உற்பத்தி பொருட்கள், தானியங்கள் உட்பட

## 300 வகையான பொருட்கள் இறக்குமதிக்கு தற்காலிக தடை

### நிதி அமைச்சு விசேட அறிவிப்பை விடுத்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பால் மா, யோகட் உள்ளிட்ட பால் உற்பத்தி உணவுப் பொருட்கள், பழங்கள் உட்பட மேலும் 300க்கு மேற்பட்ட பொருட்களுக்கு அரசாங்கம் தற்காலிக இறக்குமதித் தடையை விதித்துள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் இந்த இறக்குமதிகளுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான 04



யுனிசெப் அமைப்பின் தெற்காசியப் பிராந்திய பணிப்பாளர், ஜோர்ஜ்லரியா அட்ஜய் நேற்று (24) வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியை அமைச்சில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். கல்வி, சுகாதாரத்துறையை மேம்படுத்த இதில் கவனம் செலுத்தப்பட்டது.

### ஜனாதிபதி செயலகத்துள் அத்துமீறிய குற்றம்

## ஸ்டாலின், ஜீவந்த உட்பட 10 பேருக்கு நேற்று பிணை

### கொழும்பு கோட்டை நீதிமன்றம் உத்தரவு



ஜனாதிபதி செயலகத்துக்குள் முறையற்ற வகையில் பிரவேசித்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜரான அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின், துமிந்த நாகமுவ உள்ளிட்ட 10 சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு 04

## அடுத்தடுத்து வரவுள்ள எரிபொருள் கப்பல்கள்

### மண்ணெண்ணெய் விநியோகம் வழமைக்கு -கஞ்சன விஜேசேக்கர




30,000 மெற்றிக் தொன் சுப்பர் டீசல் நேற்று இறக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தனது டுவிட்டர் பதிவில், இரண்டாவது யூரல் மசகு எண்ணெய் 04

## கொவிட்-19 தொற்று பரவல் தீவிரம்

### எந்த நேரத்திலும் பேரழிவை ஏற்படுத்தலாம் PHI சங்கம் எச்சரிக்கை



நாட்டில் தற்போது கொவிட்-19 தொற்று பரவல் அதிகரித்துள்ளது. எனினும் அதனால் ஏற்படக் கூடிய பாரதூரத்தன்மை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் 04

## கடலைச் சுத்தப்படுத்த 90 கோடி ரூபா தேவை

### எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து 03

### ஒரு மாத காலத்தில் 21 பேருக்கு வகுப்புத் தடை

## யாழ். பல்கலையில் தொடரும் பகிடிவதை 03

### அலரிமாளிகைக்கு சேதமிழைப்பு

## பொதுமக்களிடம் மீண்டும் உதவி கோரும் பொலிஸார்



அலரி மாளிகைக்குள் பிரவேசித்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள 24 சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர். கடந்த 2022.07.09 ஆம் திகதி இடம்பெற்ற 04

## ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு நவம்பர் 16 இல்

### நேற்று நீதிமன்றினால் ஒத்திவைப்பு



டிபெண்டர் வாகனத்தில் இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக, 04

### குழுக்களிடையே மோதல்,

## மத்துகமவில் ஒருவர் வெட்டிக் கொலை

பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலால், மத்துகமவில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இதில், மேலும் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக மத்துகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். மத்துகம, போபிட்டிய 04

## முட்டையை 50 ரூபாவுக்கு விற்பனை செய்ய இணக்கம்

### முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு



முட்டையொன்றை ஐம்பது ரூபா சில்லறை விலையில் விற்க முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. 04

## கம்பஹாவில் துப்பாக்கிச் சூடு; வர்த்தகர் பலி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கம்பஹா பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டில் கட்டடப் பொருட்கள் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்துள்ள இனந்தெரியாத இரு நபர்களே மேற்படி துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் கம்பஹா படபொத குருச சந்தியில் இடம்பெற்றது.




வலப்பனை பிரதேச சபையில் அங்கம் வகிக்கும்

# எதிர்க்கட்சி தமிழ் உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளில் புறக்கணிப்பு

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி தமிழ் உறுப்பினர்களுக்கு அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டாரங்களில் பொது அபிவிருத்திகளை முன்னெடுக்க கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நிதிகள் ஏதும் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வலப்பனை பிரதேச சபை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் சபை தலைவர் மற்றும் 54 உறுப்பினர்களுடன் இயங்கிவருகிறது.

இச் சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்,தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளை சேர்ந்த 21 தமிழ் உறுப்பினர்கள் வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்கள் இராகலை, உடப்புஸ்ஸலாவை, வலப்பனை, ஹைபொரஸ்ட் மற்றும் மாகுடுகலை, டெல்மார், பகலவத்தை, சூரியகாந்தி, புரூக்சைட் ஆகிய வட்டாரங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் இச்சபையில் அங்கம் வகிக்கும் 21 தமிழ் உறுப்பினர்களில் ஐந்து பெண் உறுப்பினர்களும் காணப்படும் நிலையில் அவர்களில் தமிழ் முற்போக்குகூட்டணியின்சார்பில்தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் உறுப்பினர்களின் வட்டார மக்களுக்கு அபிவிருத்திகளை செய்வதற்கு நிதிகள் வழங்காது புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக மாதாந்த அமர்வுகளில் பல முறை சபை தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்து பிரேரணைகள் சமர்ப்பித்துள்ள போதிலும் பலன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் சபையின் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து நாளை இடம்பெறவுள்ள மாதாந்த அமர்வில் சபை தலைவருக்கு பிரேரனை ஒன்றை முன்வைக்க உள்ளதாகவும் தமிழ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆ.ரமேஸ்

# மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் தோட்டப்புற மக்கள், மீனவர்களுக்கு பெரும் பாதிப்பு

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் காட்டம்



மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் தோட்டப்புற மக்கள், மீனவர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாரிய விலை அதிகரிப்பை மின்சக்தி, எரிசக்தி அமைச்சு மேற்கொள்வதற்கு கண்டனத்தை வெளியிடுவதுடன், மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதில் மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே இவ்விலை அதிகரிப்பு குறித்து மின்சக்தி எரிசக்தி அமைச்சு உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக மண்ணெண்ணெயை நம்பிதான் உள்ளது. மண்ணெண்ணெய் விநியோகம் சீராக இடம்பெறாமையால் அவர்களது பணிகள் கடந்த சில மாதங்களாக கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. கடல் உணவுகளின் விலைகளும் பாரிய அளவில் அதிகரித்திருந்தன. இது நான்கு மடங்கு விலை அதிகரிப்பாகும். மண்ணெண்ணெயை நம்பி பொருளாதாரத்தை மேற்கொள்ளும் அனைத்து மக்களும் இதனால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

பெருந்தோட்ட மக்களும் தமது அன்றாட தேவைகளுக்கும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெயை பயன்படுத்துகின்றனர்.

எனவே எரிசக்தி அமைச்சு உடனடியாக இந்த விலை அதிகரிப்பு தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# மோகினி எல்ல பகுதியில் வீதி செப்பனிடும் பணி

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

நல்லதண்ணி மஸ்கெலியா பிரதான வீதியில் மோகினி எல்ல பகுதிகளிலுள்ள பாரிய மண் திட்டுகளை அகற்ற, வீதி அபிவிருத்தி அதிகாரசபை நேற்று நடவடிக்கை எடுத்தது.

இதன் மூலம் 30 மீட்டர் வரையுள்ள தூரம் மண் அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்க முயற்சிப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தற்போது இப்பகுதியில் மழை பெய்து வருவதால் மண் திட்டுகள் அகற்ற முடியாதுள்ளது. புவி ஆராய்ச்சி மையம் மேலும் ஆய்வு செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



நுவரெலியா தமிழ் இசைக்கலைஞர்கள்

# அபிவிருத்தி ஒன்றியத்தின் மூன்றாண்டு பூர்த்தி விழா

நுவரெலியா மாவட்ட கலைஞர்களின் வாழ்வாதாரம், அபிவிருத்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா தமிழ் இசைக்கலைஞர்கள் அபிவிருத்தி ஒன்றியம் தனது மூன்றாவது வருட பூர்த்தி விழாவை 27ஆம் திகதி, சனிக்கிழமை ஹற்றன் டிக்கோயா நகர மண்டபத்தில் நடத்தவுள்ளது.

2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பானது, பல சவால்களுக்கு முகம் கொடுத்து மூன்று வருடத்தை பூர்த்தி செய்கின்றது என ஒன்றியத்தின் செயலாளர் இராமன் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் டிக்கோயா நகர சபை மண்டபத்தில், ஒன்றியத்தின் மூன்றாம் ஆண்டு பூர்த்தி விழாவை ஸ்தாபக தலைவர் பிரபல பாடகர் ராஜ்போரா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக ஒன்றியத்தின் செயலாளர் இராமன் கேதீஸ்வரன் தெரித்தார்.

அத்துடன் அன்றைய தினம் புதிய கலைஞர்கள் ஒன்றியத்துடன் இணைந்து கொள்ளும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக தெரிவித்த அவர் சகல கலைஞர்களையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மலையகத்தில் பனிமூட்டம்

# சாரதிகளுக்கு எச்சரிக்கை

ஹற்றன் விசேட நிருபர்

மலையகத்தில் நேற்று (24) காலை தொடக்கம் மழையுடனான சீரற்ற வானிலை நிலவுவதால், பிரதான வீதிகளில் பனி மூட்டம் அதிகரித்து காணப்படுவதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் ஹற்றனிலிருந்து கித்துல்கல வரையிலும் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியிலும் பனி மூட்டம் காணப்படுவதாக ஹற்றன் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

எதிரில் வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு பனி மூட்டம் அதிகரித்து காணப்படுவதால், சாரதிகளும் பாதசாரிகளும் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தியுள்ளதுடன், சாரதிகள் வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிரவிட்டு செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

# நாவலப்பிட்டியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள்

## மஹிந்தானந்த அலுத்கமகே எம்.பி

மாவத்தகம தினகரன் நிருபர்

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் நாவலப்பிட்டிய பிரதேசத்தில் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படும் அனைத்து மக்களுக்கும் புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே தெவித்தார்.

மகாவலி ஆற்றுக்கு அருகில் தொடர்ந்து வெள்ளத்தினால் பாதிக்கப்படும் வீடுகளை இனங்கண்டு புதிய 214 வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 114 பேர் இவ்விடத்தை விட்டு வெளியேறுவதற்கான இணக்கம் தெரிவித்துள்ளனர். 100 குடும்பங்கள் இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை.

எவ்வாறாயினும் சகலரும் இவ்விடத்தை விட்டு வெளியேற்றப்பட்டு அவர்களுக்கான புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவதான வலயமாகப் பிரகனடப்படுத்தப்பட்டுள்ள இவ்விடங்களில் உள்ள மக்கள் சகலுரும் வெளியேற்றப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

ஒவ்வொருவருக்கும் 15 பேச்சஸ் காணிகள் வழங்கி தலா 40 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. மிகப் பொருளாதார நெருக்கடியான கால கட்டத்திலும் பாலங்கள், பாதைகள் அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தில் இருந்து 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மொத்தமாக 400 மில்லியன் ரூபா செலவாகும் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே தெவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். எம். பேரவையின் ஏற்பாட்டில் நாவலப்பிட்டிய பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் நிவாரண உதவி வேலைத் திட்டத்தின் கீழ் எட்டாவது வேலைத் திட்டமாக பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள் உள்ளிட்டவை வழங்கி வைக்கும் வைபவம் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் இடம்பெற்றது.



வை.எம்.எம்.ஏ, பேரவை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கண்டி மாவட்டப் பாராராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே இவ்வாறு தெவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ, பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி உரையாற்றும் போது,

நாவலப்பிட்டிய பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட பிரதேச மக்களுக்கு தொடர்ச்சியாக மனிதாபிமான தொண்டுப் பணிகள் எமது அமைப்பு ஆற்றி வருகின்றது. இது இவ்வமைப்பின் எட்டாவது செயற்திட்டம் ஆகும்.

வெள்ள அனர்த்தம் ஏற்படுவது தொடர்பில் ஊர் மக்கள் கையொப்பமிட்டு எமக்கு அளித்த கோரிக்கைக்கு இணங்க எமது அமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தோம்.

அதற்கு இணங்க ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகேயின் துரித நடவடிக்கையின் பயனாக இப்பிரதேச மக்களுக்கு புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்க முன்வந்துள்ளமை ஒரு முக்கிய விடயமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜெ. ஜெ பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் டொக்டர் ஐ. வை. எம். ஹனீப், யட்டிநுவர பிரதேச சபையின் உறுப்பினர் வசீர் முக்தார், நாவலப்பிட்டிய பிரதேச செயலாளர் சமீர நுவன் ரத்நாயக. கண்டி மாவட்ட வை. எம். எம். ஏ. அமைப்பின் இணைப் பதிகாரி இஹ்திசாம், நாவலப்பிட்டிய நகர சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சப்ரகமுவ சமன் தேவாலயத்தின் எசல பெரஹரா

இரத்தினபுரி தினகரன் நிருபர்

வரலாற்று சிறப்பு மிக்க சப்ரகமுவ சமன் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் (எசல பெரஹரா) வெள்ளிக்கிழமை பௌத்த தர்மபோதனையுடன் ஆரம்பமாகவுள்ளதாக சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமேயான மிகார ஜயசுந்தர பண்டார கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது...

வெள்ளிக்கிழமை (26) ஆரம்பமாகும் இந்த உற்சவமானது அடுத்த மாதம் 11 ஆம் திகதி (2022.09.11) நிறைவடையும். இது சபரகமுவ வரலாற்றில் 797 ஆவது உற்சவமாகும்.

வெள்ளிக்கிழமை தர்ம போதனையும் மறு தினமான சனிக்கிழமை 27 ஆம் திகதி சீலதான நிகழ்வும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தேவாலயத்தில் கப் கட்டும் சம்பிரதாய நிகழ்வும் நடைபெறுவதுடன் அன்றைய தினம் தொடக்கம் 31 ஆம் திகதி புதன்கிழமை வரை கும்பல் பெரஹராவும் அடுத்த மாதம் முதலாம் திகதி (01.09.2022) வியாழக்கிழமை தொடக்கம் 5 ஆம் திகதி (05.09.2022) திங்கட்கிழமை வரை வீதி பெரஹராவும் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (06.09.2022 தொடக்கம் 10 ஆம் திகதி (10.09. 2022) வரை மகா பெரஹராவும் நடைபெறுவதுடன் இறுதி நாளான 11 ஆம் திகதி பகல் நீர் வெட்டு வைபவத்துடன் உற்சவம் நிறைவடையும்.

# உக்குவளை அஜ்மீர் தேசியக் கல்லூரி வீதி புனரமைப்பு



மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட உக்குவளை அஜ்மீர் தேசியக் கல்லூரியின் பிரதான உள்வீதி 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி உதவியை பாடசாலை அபிவிருத்தி சங்கம் பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன் விரும்பிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. இவ்வீதியின் புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது கல்லூரி அதிபர் எம். சரூகினால் ஆரம்பித்து வைப்பட்டது.

தலவாக்கலை நாவலப்பிட்டிய பிரதான வீதி

# பிரித்தானியர் காலம் முதல் இதுவரை புனரமைக்கப்படவில்லை

தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை நாவலப்பிட்டிய பிரதான வீதி அகலப்படுத்தப்படாமல் இருப்பதால் தாம் பெரும் சிரமங்களுக்கும் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அவ்வீதியைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியானது பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட வீதி எனவும், அதன் பின்னர் இதுவரை அகலப்படுத்தப்படாமலும், முறையான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படாமலும் உள்ளதால், வீதியை பயன்படுத்துவதில் கடும் சிரமங்களை எதிர்நோக்குவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக வீதியில் இருந்த கற்கள் அடித்துச் செல்லப்பட்டு தற்போது அனைத்து இடங்களும் உடைந்து காணப்படுவதாகவும், இதன் காரணமாக சிறிய வாகனங்களான முச்சக்கர வண்டிகள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள், வேன்கள் போன்றவை கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாவலப்பிட்டிய நகரில் இருந்து திம்புள்ள, பத்தனை சந்தி வரையிலான 30 கிலோ மீற்றர் தூரம் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் வீதி மிகவும் குறுகலாக செங்குத்தான



வளைந்த சரிவுகளுடன் இருப்பதால், இரண்டு கதவுகள் கொண்ட பேருந்துகள் மற்றும் பிற கனரக வாகனங்கள் செல்லும் போது முந்திச் செல்ல முடியாமல் அதன் பின்னே தொடர்ந்து வாகனம் செலுத்த வேண்டியுள்ளது.

இவ் வீதியானது தலவாக்கலை, டயகம, அகரப்பத்தனை, போபத்தலாவ, மெனிக்பாலம, மன்ராசி, ஹோல்புரூக், மெரயா, திஸ்பன்ன, எல்ஜின், இராணிவத்தை, நாகசேன, லிந்துலை, பால்மஸ்டன், நானுஓயா, பத்தனை, போகாவத்த, கொட்டகலை மற்றும் நாவலப்பிட்டிக்கு செல்லும் குறுகிய வீதியாகும். இந்த வீதியை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரும் அதிகாரிகளும் முன்வருமாறு சாரதிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தினகரன்

2022 ஓகஸ்ட் 25 வியாழக்கிழமை




தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
லுஹர் - 12.14
அஸர் - 03.25
மஃரிப் - 06.22
இஷா - 07.34

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆவணி 9
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி






நாட்டின், புகழ்பூத்த கலைஞர்கள், கல்விமான்கள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரை கௌரவிக்கும் "டாப் ஹன்ரட்' நூறுபேருக்கு விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர. இலக்கிய புரவலர் ஹாஸிம் உமர் மற்றும் சிலுமின பத்திரிகையின் ஆசிரியர் தர்மன்விக்ரமரத்ன ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். பாராட்டுப் பெறுவோர் விருதுகளைப் பெற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.

# தண்டனை சட்டக்கோவை திருத்த சட்டமூலம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கையிலுள்ள LGBTQ+ சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் தண்டனை சட்டக்கோவை திருத்தத்திற்கான சட்டமூலம் நேற்று (24) பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேமநாத் சி.தொலவத்தவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

தண்டனை சட்டக்கோவை (திருத்தம்) (19வது சட்டம்) தண்டனை சட்டக்கோவையில் திருத்தம் செய்வதற்கான இந்த சட்டமூலம் (23) பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்தவினால் தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



LGBTQ + சமூகம் தொடர்பாக இந் நாட்டில் மிகவும் பின்தங்கிய சிந்தனை காணப்படுவதோடு, இதன் காரணமாக, அன்றாட வாழ்க்கையில் மட்டு மன்றி, அரச மற்றும் சட்ட அமுலாக்க நிறுவனங்களிலும் கூட, இந்த சமூகம் பல்வேறு வகையான வன்முறை, அடக்குமுறை மற்றும் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மேலும், சில சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள் கூட இந்த சமூகம் தொடர்பில் மீறப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

பாலியல் முனைப்புகள் மற்றும் பாலியல் அடையாளங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தனிநபர்களுக்கு தண்டனை வழங்கும் செயற்பாடு விக்டோரியா காலத்தில், காலனித்துவ சட்ட கட்டமைப்புகளின் வாயிலாக உலகம் முழுவதும் பரவியது. ஆனால் நவீன மனநல மருத்துவத்தில், இது ஒரு குற்றமாகவோ அல்லது வக்கிரமாகவோ கருதப்படவில்லை. மேலும், அபிவிருத்தி அடைந்த நாடுகள் இந்த சமூகத்தை தண்டிக்கும் மற்றும் அவர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் விதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்தவினால் இந்த தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

# அதிவேக நெடுஞ்சாலையில் கோர வாகன விபத்து

## கொரிய மொழி ஆசிரியை பிரியந்தி பலி

அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் இரவு (23) இடம்பெற்ற வாகன விபத்தில் கொரிய மொழி பயிற்சி ஆசிரியையான பிரியந்தி பண்டார பலியாகியுள்ளார்.

16 ஆவது கிலோமீற்றர் மைல் கல்லருகிலான சபுகஸ்கந்த பகுதியில் ஓடுகளைச் ஏற்றிச் சென்ற லொறியின் பின்புறம், அவரது கார் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதான ஒரு பிள்ளையின் தாயாராவார்.

# ஜனாதிபதி ரணில் உலகின் வலிமையான தலைவர்

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. உலகின் வலிமையான தலைவரான ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இருக்கின்றாரென பாராளுமன்ற உறுப்பி



னர் வஜிர அபேவர்த்தன நேற்று (24) சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எமது பலமான தலைவரை சிலர் அழித்து

04

வசந்த முதலிகே உட்பட மூவர் கைது

# உயர் நீதிமன்றில் 03 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல்

*லோரன்ஸ் செல்வநாயகம்*

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளரான வசந்த முதலிகே உள்ளிட்ட மூவர் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிராக இன்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்வதற்கு அவர்களின் சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர்.

அதுதொடர்பில் சட்டத்தரணி நுவன் போபகே கருத்துத் தெரிவிக்கையில், நபரொருவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது

04

# நாடு முழுவதுமுள்ள அரிசி ஆலைகளை கண்காணிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

நாடு முழுவதுமுள்ள அரிசி ஆலைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் பணிப்புரைக்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபை இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அரிசி ஆலைகள், சுற்றாடலில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அறிவது மற்றும் சுற்றாடல் மாசடைவதை தடுக்கும் வகையிலான வியூகங்களை வகுப்பது உள்ளிட்ட நோக்கில், இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

சுற்றாடல் அமைச்சு 27,01,2022 இல், வெளியிட்ட வர்த்தமானியில் அரிசி ஆலைகள் அமைய

04



எக்ஸ்ப்ரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து

# கடலைச் சுத்தப்படுத்த 90 கோடி ரூபா தேவை

இலங்கையின் கடற்பரப்பில் கடந்தாண்டு தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து வெளியான கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு, 90 கோடியே 38 இலட்சத்து 57 ஆயிரத்து 293 ரூபா (90,38,57,293.01) தேவைப்படுவதாக, சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இக்கழிவுப் பொருட்கள் மன்னாரிலிருந்து ஹம்பாந்தோட்டை கிரிந்த வரையான கடற்பரப்பில் பரவியதாகவும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி திருமதி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

இதேவேளை, கப்பல் விபத்துக்களை கையாள்வதற்கான தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், புதிய சட்டங்களை உருவாக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு

04

# பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை தவிர்க்கவும்

## சட்டத்தரணிகள் சங்கம் அரசிடம் வேண்டுகோள்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் மற்றும் நிறைவேற்றுவோர் ஆகியோரைக் கேட்டுள்ளது.

அரசியலமைப்பின் கீழ், நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கிணங்க செயற்படும் நபர்களுக்கெதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவது பாரிய ஆபத்தானதென்றும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்வது, தடுத்துவைப்பு உத்தரவின் கீழ் தடுத்து வைப்பது தொடர்பில் தமது சங்கம் மிகுந்த கவனத்தை செலுத்தி வருவதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் அதன் செயலாளர் இசுரு

04

யாழ். பல்கலையில் தொடரும் பகிடிவதை

# ஒரு மாத காலத்தில் 21 பேருக்கு வகுப்புத் தடை

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களை பகிடிவதைக்குட்படுத்தும் சிரேஷ்ட மாணவர்களுக்கு எதிராக பல்கலைக்கழக நிர்வாகம் வகுப்புத்தடை விதித்து வருகின்றது.

கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் 19 கலைப்பீட மாணவர்கள் உள்ளிட்ட 21 பேருக்கு வகுப்பத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவர்கள், தடைக்காலத்தில் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளோ, மாணவர் விடுதிக்குள்ளோ உட்பிரவேசிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கலைப்பீடத்தின் புதிய மாணவர் ஒருவரை பாலசிங்கம் விடுதியில் வைத்து பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், மூத்த மாணவர் ஒருவருக்கு விசாரணைகள் முடிவடையும் வரை தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீட புதுமுக மாணவரை பல்கலைக்கழக

04

# சைவ மங்கையர் வித்தியாலயத்தில் மூன்று நாள் கண்காட்சி

கொழும்பு, வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையிலுள்ள சைவ மங்கையர் வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி தொடர்ச்சியாக மூன்று நாட்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதிபர் அருந்ததி இராஜவிஜயனின் வழிநடத்தலில் சிறப்பாக நடைபெறவுள்ள இக்கண்காட்சி இன்று 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 08 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் பிரதம விருந்திருனராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபாரட்ணம் அதிரதன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.


# பெறுகை அறிவித்தல்

## பண்டாரவளை மாநகர சபை

## பிழை திருத்தம்

மேற்படி தலைப்பில் தினகரன் நாளிதழ் 2022.08.08ம் திகதி 11ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் அட்டவணையில் கட்டிட நிர்மாண துறையில் தேவைப்படும் CIDA தரம் எனும் நிரல் கீழ்க்காணுமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | சிவில் வேலை பெறுமதி (ரூ.மி.) (வெட் இன்றி) | கட்டிட நிர்மாணத் துறையின் தேவைப்படும் CIDA தரம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணைத் தொகை (காசாக செலுத்துவதாயின்) (ரூ.) | நிர்மாண கால எல்லை (நாட்கள்) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | BWMC/4/5/2022/01 | பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான நுகசெவன கடைத் தொகுதியின் நிர்மாணம் (கட்டம் 3) | 26.36 | C5 & C4 | 132,000.00 | 180 | 12,500.00 |

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை

**தலைவர் - பெறுகைக் குழு,**
**பண்டாரவளை மாநகர சபை,**
**பூங்கா வீதி, பண்டாரவளை.**
**தொ.பே. இல. 057-2222275/ பெக்ஸ் இலக்கம்: 057-2222875**



திகதி 23.08.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4856
ரூ. 8,441,240.00
B 6 7 3 0 8 9
ரூ. 39,899,581.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1313
ரூ. 12,334,833.20
வெற்றி இலக்கங்கள்
7 4 6 2 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 886
ரூ. 2,110,360.00
N 05 07 60 81
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 122,541,404.40

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 165
ரூ. 6,179,100.00
வெற்றி இலக்கங்கள்
01 16 34 45
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 4,182,717.80

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3098
ரூ. 4,188,620.00
வெற்றி இலக்கங்கள்
F 10 21 39 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 71,364,317.20

கோடி 26 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1204
ரூ. 3,064,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 267,148,982.00
S 10 30 43 61 75
National Lotteries Board

## நேருக்கு நேர் மோதி வேன் – ஆட்டோ விபத்து

### இருவர் பலி, தொடங்கொடவில் சம்பவம்

களுத்துறை – மத்துகம வீதியில் மலபட பகுதியில் (23) பிற்பகல் வேனும், முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இதில், ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தொடங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியின் பின்னால் பயணித்த தொடங்கொடை சபுகஹவத்த பகுதியைச் சேர்ந்த, ஆறுமுகம் சத்தியராஜா (வயது 45) மற்றும் கே ஏ லக்சித தேவப்பிரிய (வயது 36) ஆகிய இருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து மத்துகம, களுத்துறை நோக்கி முச்சக்கரவண்டி சென்று கொண்டிருந்ததாகவும், களுத்துறையிலிருந்து மத்துகம நோக்கி பயணித்த வேன் ,நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## EPF பெற்றுக் கொள்வதற்கு இனி...

மேற்கொள்வதற்கான தினம் மற்றும் நேரத்தை 1958 எனும் இலக்கத்திற்கு அழைத்தோ அல்லது appointment.labourdept.gov.lk இணையததளமூடாகவோ மேற்கொள்ள முடியும்.

அதன் மூலம் வரிசையில் நிற்காமல் தொழில் திணைக்களத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள கூடிய சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டி காட்டினார் .

அதன்படி சாதாரண நன்மையை பெறுவதற்கான விண்ணப்பம், 30% நன்மைக்காக விண்ணப்பித்தல், மரணமடைந்த அங்கத்துவ உரிமையாளர்கள் நன்மையை பெறுவதற்கான மற்றும் சேவை பெறுபவர்களை பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை இதன் ஊடாக மேற்கொள்ள முடியும்.

இதுவரை காலமும் நாரஹேன்பிட்டிய தொழில் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஒன்லைன் வசதிகள் எதிர்வரும் முதலாம் திகதியின் பின்னர் 40 மாவட்ட காரியாலயங்கள், 17 உப காரியாலயங்கள் மற்றும் 11 வலய காரியாலயங்கள் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும் என தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

இதுவரைக் காலமும் காரியாலத்துக்கு வந்து இலக்கங்களை பெற்றுக்கொண்டு சேவைகளை பெற்றுக் கொண்டதற்கு பதிலாக ஒன்லைன் மூலம் நேரத்தை ஒதுக்கி கொள்ள முடியும் என்றும், அவ்வாறு செய்யாவிட்டால் சேவையாளர்கள் சிரமத்துக்கு உள்ளாக நேரிடும் எனவும் ஆணையாளர் தெரிவித்தார். கண்காணிப்பு கால எல்லைக்குப் பின்னர் ஒன்லைன் நடவடிக்கை கட்டாயமாக்கப்படும் எனவும் தொழிலாளர் திணைக்களத்தின் சேவைகளை திறம்பட மற்றும் விரைவாக மேற்கொண்டு பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை இதன் மூலம் குறைக்க எதிர்பார்ப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

## உணவுப் பணவீக்கம் அதிகமுள்ள...

தெரிவித்துள்ளார். இது தவிர்க்க முடியாததென்றாலும், அதற்கு தீர்வு காண முடியும். அரிசியில், இலங்கை உபரியாக உள்ள நாடு என்றும், உணவில் தன்னிறைவு பெற்ற நாடு என்றும் அவர் தெரிவித்தார். இரசாயன உர பாவனையை தடை செய்வதற்கான தீர்மானம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் இதற்கு வழிவகுத்தது. இது உணவு நெருக்கடிக்கு முக்கியமாக வழிவகுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலக உணவு நெருக்கடி இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் விழிப்புணர்வை ஏற்படுத்தியதாகவும், இருப்பினும் ஊடகங்கள் உட்பட சில தரப்பினரால் இதுபற்றி கேலி செய்யப்பட்டாலும், பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியும், தானும் உணவு நெருக்கடி தொடர்பில் மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தியதாகவும், நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் சவாலை விவசாயிகள் இன்று ஏற்றுக்கொண்டுள்ளனரெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சராக தாம் பொறுப்பேற்ற போது, 2,48,000 ஏக்கர் காணியில் மாத்திரமே விவசாயம் மேற்கொள்ளப்பட்டதாக கூறிய அமைச்சர், அதனை 2,75,000 ஏக்கராக அதிகரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், எரிபொருள் மற்றும் உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் நிலப்பரப்பை 5,12,500 ஹெக்டேயராக அதிகரிக்க முடியும். இதற்கமைய நாட்டில் ஏற்படக்கூடிய அரிசி தட்டுப்பாட்டைத் தடுக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம்...

தமது தொழில் செயற்பாடுகளுக்கு தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசலை தாராளமாக வழங்க வலியுறுத்தினர். மண்ணெண்ணெய் விலையேற்றம் தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் இவர்கள் கேட்டுக் கொண்டனர். மேலும்,ஜனாதிபதியை சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

நேற்று மாலை, இவ் விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் கடற்றொழில்அமைச்சருக்குமிடையிலான கலந்துரையாடலில் இதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி,இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சரிடம் கூறினார்.

அதேவேளை, இந்தியக் கடற்றொழிலாளர்களின்எல்லைதாண்டிய சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக, மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவை காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும், விரைவில் இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்துக்கு தீர்வு காணப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## பாராளுமன்றில், 30 ஆம் திகதி...

திட்ட உரை நடைபெறும். அதனையடுத்து இம்மாதம் 31ஆம் திகதி மற்றும் செப்டம்பர் (01) மற்றும் (02) திகதிகளில் வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் பாராளுமன்றம் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை நடைபெறுமென பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது. பாராளுமன்றம் எதிர்வரும் (29) காலை 9:30 மணிக்கு கூடவுள்ளது. மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சபையில் சமர்ப்பிக்கவுள்ளது.

## 300 வகையான பொருட்கள்...

அறிவித்தலை நிதி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதன்படி, பால்மா, யோகட் உள்ளிட்ட ஏனைய பால் உற்பத்தி உணவுப் பொருட்கள், பழங்கள், தானிய வகைகள், வாசனைப் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வருவதாகவும், நாட்டு நிதி நிலையின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு அம்சமாக இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு தற்காலிக இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலில் தேங்காய், பூக்கள் மற்றும் பூக்கன்று வகைகள், நிலக்கடலை, தண்ணீர் போத்தல், சொக்லேட், அற்கஹோலுடனான பியர், சம்பூ வகைகள், வீட்டு உபகரணங்கள், நிர்மாணங்களுக்கான உபகரணங்கள் ஆகியவையும் உள்ளடங்குவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

## பொதுமக்களிடம் மீண்டும் உதவி...

சம்பவம் தொடர்பில், இந்த சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட வேண்டுமென கொழும்பு தெற்குப் பிரிவின் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து அறியத் தருமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## ஸ்டாலின், ஜீவந்த உட்பட...

கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று (24) உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்களை தலா 05 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் விடுவிக்கப்பட்டனர். கடந்த ஜூலை (13) ஜனாதிபதி செயலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அங்கு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய சம்பவத்தின் சந்தேகநபர்களாக இவர்கள் பெயரிடப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தனர். வழக்கை எதிர்வரும் (31) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் பேராதனை பல்கலை மீளவும் ஆரம்பம்

கொரோனா தொற்று பரவல் காரணமாக தடைப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பேராதனை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் வழமைபோன்று பல்கலைக்கழகங்களில் கற்கைகளை தொடர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எனினும், தற்போது பல்கலைக்கழக கற்கைகள் வழமை போன்று நடைபெற்று வருவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார். இதற்கமைய, மாணவர்கள் தற்போது பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் விரிவுரைகளிலும் பங்குபற்றுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். கொரோனா பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த பட்டமளிப்பு விழாவும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் நவம்பர் 30ஆம் திகதிவரை நீடிப்பு

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டில் கடந்த மார்ச் 31ஆம் திகதி முதல் கடந்த மே 15ஆம் திகதி வரை இடம்பெற்ற குழப்பகரமான சம்பவங்களில், இடம்பெற்றுள்ள மரணங்கள் மற்றும் சொத்துக்களுக்கான பாதிப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டதுடன் அந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் வகையில் எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வர்த்தமானி ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் பாவனையாளர் சிகிச்சைபெறும் சேனாபுர புனர்வாழ்வு நிலையத்தில் பதற்றம்

### பொலிஸார், படையினர் களத்தில்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமாக இயங்கி வரும் பொலன்னறுவை – சேனாபுர புனர்வாழ்வு நிலையத்தில், பதற்றம் நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு வரவழைக்கப்பட்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனைக்காக கைது செய்யப்படுபவர்களுக்கு ஒரு வருடம் புனர்வாழ்வு அளிக்கப்படுவதோடு, முதல் ஆறு மாதங்களுக்கு அவர்கள் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர். பின்னர், இந்த கைதிகள் தொழில் பயிற்சிக்காக சேனாபுர தொழிற்பயிற்சி நிலையத்துக்கு அழைத்துவரப்படுவது வழக்கமாகும்.

எவ்வாறாயினும் நேற்று முன்தினமும் (25) நேற்றும் (24) சிலர் பொருளாதார நெருக்கடி காரணமாக வீட்டுக்கு செல்ல விரும்புவதாக கூறி வன்முறையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, ஒரு குழுவினர் தப்பிச் செல்ல முயன்று போராட்டத்தை ஆரம்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில், கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த கடற்படையுடன் இணைந்து பொறிமுறை உருவாக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கடற்றொழில்சார் சட்ட விரோத செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வகையிலான 24 மணி நேரமும் செயற்படும் பொறிமுறை ஒன்றை கடற்படையினருடன் இணைந்து உருவாக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், மண்ணெண்ணெய் விநியோகம் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், நாடு முழுவதுமுள்ள கடற்றொழிலாளர்களுக்கும் மண்ணெண்ணெ கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன், அது தொடர்பான அறிக்கையை தனக்கு சமர்பிக்குமாறும் கடற்றொழில் அமைச்சர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார். அதேவேளை கடலட்டை வளர்ப்பு தொடர்பாக இக் கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன், இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளை சேர்ந்த தனியார் முதலீட்டாளர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றமையினால், அவர்களைப் பயன்டுத்தி, உடனடித் தேவையாக எமக்கு இருக்கின்ற கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்களை நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்க வேண்டுமெனவும கற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## அடுத்தடுத்து வரவுள்ள எரிபொருள்...

கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. இதேவேளை மற்றொரு டீசல் கப்பல் இன்று (25) மற்றும் நாளை (26) வெள்ளிக்கிழமைக்குமிடையில் நாட்டை வந்தடையவுள்ளது, மேலும் 92 ஒக்டேன் பெற்றோல் தாங்கிய மற்றொரு கப்பலை சனிக்கிழமை அல்லது திங்கட்கிழமைக்குள் அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானிய தூதுவர்...

முன்னிட்டு, ஜப்பான் தூதரகமும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விசேட நிகழ்ச்சி, செப்டெம்பர் மாதம் (06) நடைபெறவுள்ளதுடன் இது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## கொவிட்19 தொற்று...

உபுல் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசி மூலம் நோய் எதிர்ப்பு சக்தியால் கொவிட்19 தொற்று ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது. மீண்டும் தொற்றுப்பரவல் தீவிரமடைந்தால், அது எந்நேரத்திலும் பேரழிவை ஏற்படுத்தும். இது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தவில்லை.

கொவிட்19 பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்ட மட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது. பாடசாலைகளில் தொற்று உறுதி செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எந்தவொரு சுகாதார வழிகாட்டுதல்களுக்கும் ஆலோசனைகளும் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

கொவிட்19 வைரஸ் மீண்டும் பரவினால், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் கூட்டங்களை ஏற்பாடு செய்பவர்கள் மீது பொது சுகாதார பரிசோதகர் சங்கம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கும்.

## ஹிருணிகாவுக்கு எதிரான...

சட்ட மா அதிபர் தாக்கல் செய்த வழக்கின் மேலதிக விசாரணையை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று (24) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஹிருணிகா பிரேமச்சந்திரவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததுடன், அவரது சிரேஷ்ட சட்டத்தரணி அஷான் பெர்னாண்டோ சுகயீனமடைந்துள்ளதால் இந்த வழக்கு விசாரணைக்கு வேறொரு திகதியை வழங்குமாறு கோரினார்.

இதனையடுத்து, வழக்கின் விசாரணையை நவம்பர் 16 க்கு ஒத்திவைத்த நீதிமன்றம், அன்றைய தினம் சாட்சியை ஆஜராகுமாறு உத்தரவிட்டது.

## மத்துகமவில் ஒருவர்...

பாடசாலைக்கருகில் இனந்தெரியாத குழுவினால், இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்டவர் மத்துகம, போபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த டொன் இந்திக்க துஷார என்ற 39 வயதுடையவராவார். படுகாயமடைந்த மற்றைய நபர், வட்டேவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## முட்டையை 50 ரூபாவுக்கு...

வர்த்தக அமைச்சருடன் நேற்று (24) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் வெள்ளை முட்டையொன்றின் சில்லறை விலை 43 ரூபாவாகவும் சிவப்பு / பழுப்பு முட்டை ஒன்றின் சில்லறை விலையை 45 ரூபாவாகவும் அறிவித்து நுகர்வோர் விவகார அதிகார சபையால் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

முட்டை உற்பத்தி செலவை விட உற்பத்தியாளருக்கு 05 ரூபா இலாபம் கிடைக்கும் வகையில், விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக இது தொடர்பான விலையை அறிவித்த வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், கால்நடைத் தீவனத்தின் விலை உயர்ந்து வருவதுடன், அந்த விலைக்கு முட்டையை விற்க முடியாதெனக் கூறி, முட்டை உற்பத்தியாளர்கள் இந்த விலைக்கு உடன்படவில்லை. இதன்படி முட்டை உற்பத்தியாளர் சங்கம் அண்மையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்தியது. எனினும் நேற்றைய கலந்துரையாடலின் பின்னர் சந்தையில் ஒரு முட்டையை 50 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

## ரணில் உலகின்... 03ஆம் பக்கத் தொடர்

விட நினைக்கினறனர். அவரைப் பாதுகாப்பது நமது கடமை என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டை திவால் நிலைக்குத் தள்ளியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வஜிர அபேவர்த்தன குறிப்பிடுகிறார்.

## கடலைச் சுத்தப்படுத்த... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு (23) பணிப்புரை வழங்கினார்.

சட்ட மாஅதிபர் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சின் அனுசரணையுடன் உடனடியாக இது அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எம்.வீ. எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் எரிந்து மூழ்கியதால், நாட்டின் கரையோரப் பகுதிகள் மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான இழப்பீடுகளை உடனடியாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் (23) நடைபெற்ற கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி திருமதி தர்ஷனி லஹந்தபுர கூறுகையில், இலங்கை கடற்பரப்பில் எம்.வீ. எக்ஸ்பிரஸ் பேர்ல் (M.V. Express Pearl) மூழ்கியதால் மன்னாரிலிருந்து ஹம்பாந்தோட்டை கிரிந்த வரையிலான கடற்கரைப் பகுதியில் கப்பலிலிருந்து வெளியேறிய பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளை அகற்றி சுத்தம் செய்தமைக்கு தணேூறு கோடி முப்பத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா (90,38,57,293.01) செலவிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்..

மூழ்கிய கப்பலின் கொள்கலன்களிலிருந்து வெளியாகிய பிளாஸ்டிக் மற்றும் இரசாயனப் பொருட்களை அகற்றி, நாட்டின் கடற்கரையை முழுமையாக சுத்தம் செய்ய இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்றும் அவர் கூறினார்.

தற்போது, கப்பலிலிருந்து வெளியாகும் 1,6 0 0 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் மணிகள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் பமுனுகம பிரதேசத்தில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட களஞ்சியசாலைகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. சட்ட ஆலோசனையின் அடிப்படையில் இவை தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## உச்ச நீதிமன்றில்... 03ஆம் பக்கத் தொடர்

செய்யப்படுவது அநீதியான செயலென்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஆர்ப்பாட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய நபர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்வது அநீதியானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்வதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை உபயோகப்படுத்த வேண்டாமென கேட்டுக்கொண்டுள்ளது.

## நாடு முழுவதுமுள்ள... 03ஆம் பக்கத் தொடர்

வேண்டிய இடங்கள், அந்த ஆலைகள் கொண்டிருக்க வேண்டிய நிலப்பரப்புக்களை ஏ,பி,சீ என வரையறை செய்துள்ளது. இந்த வரையறைகளுக்குட்பட்ட ஆலைகளுக்கே சுற்றாடல் அமைச்சு அனுமதி வழங்குகிறது. இவ்வரையறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகள் சட்டவிரோதமாகவே கருதப்படும்.

எனவே, இவ்வாறான சட்டவிரோத அரிசி ஆலைகள் மக்கள் வாழும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதா? என்ற, கள ஆய்விலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஈடுபட்டுள்ளது. பொதுவாக, அரிசி ஆலைகளால் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே நாடு முழுவதுமுள்ள ஆலைகளில் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. வர்த்தமானியின் விதிகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளால் ஏற்படும் கழிவுகளால், சூழல் மாசடைவதை உச்சளவில் குறைப்பதற்கான தொழினுட்ப உதவி,ஒத்துழைப்புக்கள் இந்த ஆலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும். வர்த்தமானி விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ள அனைத்து ஆலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன. இவ்வாறான ஆலைகள், சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை இல்லாதொழிக்க உடனடி ஏற்பாடுகளைச் செய்யுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அமைச்சர் நஸீர் அஹமட் பணிப்புரை வழங்கியுள்ளார். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இவ்வாறன ஆலைகள் மீது அவசரமாக அதீத கவனம் செலுத்துமாறும் அமைச்சரால் பணிக்கப்பட்டுள்ளது. வாராந்தம் அமைச்சில் நடைபெறும் கலந்துரையாடலிலே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அமைச்சரின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, ஆலோசகர் கருனாசேன ஹெட்டியாராய்ச்சி,மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜெயசிங்க உள்ளிட்ட முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## பயங்கரவாத... 03ஆம் பக்கத் தொடர்

பாலபட்டபெந்தி ஆகியோர் கையொப்பமிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் கருத்துக்களை, வெளியிடுவதற்கு அரசியலமைப்பில் மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ள இச்சங்கம், கருத்து சுதந்திரத்தை முடக்குவதற்கும் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமையின் அடிப்படையில் செயற்படும் நபர்களை இலக்குவைத்து பயங்கரவாத தடைச்சட்டத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதும் பாரிய ஆபத்தாகும் என்றும் அந்த சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஒரு மாத காலத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

வாயிலுக்கு அருகில் பகிடிவதை புரிந்து தாக்கிய குற்றச்சாட்டில், விஞ்ஞான பீட மூத்த மாணவர்கள் இருவருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது. புதுமுக மாணவர்களை கடந்த மாதம் தெல்லிப்பளை பகுதிக்குஅழைத்து, பகிடிவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கலைப்பீடமாணவர்கள் 18 பேருக்கு வகுப்பத்தடை விதிக்கப்பட்டுள்ளது. பகிடிவதை சம்பவங்கள் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பூர்வாங்க விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# கிழக்கின் குரல்



## கல்முனை ஆழ்கடல் மீனவ சங்கம்

# மண்ணெண்ணெய், டீசல் கோரி அமைச்சர் டக்ளஸுக்கு கடிதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, கல்முனை ஆழ்கடல் மீனவ சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். நசீர் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்கள் தனது தொழிலை மேற்கொள்வதற்கு தங்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடற்றொழில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மீன்பிடித் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்காமல் மீனவர்களின் தேவைக்கு ஏற்ப எரிபொருளை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறும் கூறினார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; கைது செய்யப்பட்ட 34 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

**கல்லடி குறூப் நிருபர்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 34 பேரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று முன்தினம் (23) உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 69 பேரை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்குத் தாக்கல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் ஆகியோரது வழக்குகள் நீதவான் நீதிமன்றில் இருந்து மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன் 11 பேர் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டதுடன் 21 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து, 34 பேர் தொடர்ந்தும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அனுதாரபுரம், கேகாலை, பதுளை, மொனராகலை திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மொனராகலை, பதுளை மற்றும் மட்டக்களப்பு ஆகிய சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்து வருபவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இணைய காணொளி மூலம் வழக்கு இடம்பெற்றதுடன், எதிர்வரும் 06.09.2022 ஆம் திகதிவரை 34 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.





திருகோணமலை தி/ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் அல் ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் அனுசரணையுடன் பாடசாலை அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக குடிநீர் தொகுதி அமைக்கப்பட்டு திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் சிறிதரனின் பங்கேற்புடன் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகமட் நௌபரால் உத்தியோகபூர்வமாக பாடசாலைக்கு கையளிக்கப்பட்ட போது,...

படங்கள் கிண்ணியா தினகரன் நிருபர்

## பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிருவாக தெரிவும் ஒத்திவைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் 2022/2023ஆம் ஆண்டிற்கான பொதுச் சபைக் கூட்டமும், புதிய நிருவாகத் தெரிவும் பிற்போடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இதன் பொதுச் சபைக் கூட்டமும், புதிய நிருவாகத் தெரிவும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்துவதென தீர்மானக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த 2022.08.21ஆம் திகதிய நிர்வாக சபைக் கூட்டத் தீர்மானத்திற்கமைய தவிர்க்க முடியாத காரணங்களினால் நடாத்த முடியாதுள்ளமையினால், மேற்படி பொதுச் சபைக் கூட்டமானது எதிர்வரும் 2022.09.18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

# அக்கரைப்பற்றில் 105 வயது முதியவர் நேற்று காலமானார்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று முதலாம் குறிச்சி, மத்ரஸா வீதியைச் சேர்ந்த சரிபுத் தம்பி (ஆயப்பா) தனது 105 ஆவது வயதில் புதன்கிழமை (24) காலமானார்.

இவர் மர்ஹூமா ஆசியா உம்மாவின் கணவரும், பாறூக், லெத்தீப், இஸ்ஸதீன் ஆகியோரின் மூத்தப்பாவும் ஆவார். இவர் மரணிக்கும் வரையிலும் நல்ல ஆரோக்கியமான முறையில் இருந்ததோடு, வயது முதிர்ந்த நிலையில் இப்பிரதேசத்தில் மரணிப்பவரின் எண்ணிக்கை மிகக் குறைவு என்ற அடிப்படையில் இவரின் ஜனாஸாவை பார்வையிட பெருந்திரளான மக்கள் வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

**பாலமுனை தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 45 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (23) ஆஜர்படுத்திய போது எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஆற்றுவாழைத் தாவரங்களால் மீனவர்கள் அவதி; மீன்பிடி பாதிப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியில் பெருகிவரும் ஆற்றுவாழைத் தாவரங்களால் வாவி அழிவடைந்து வருவதுடன் மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்த வாவியில் மீன்கள் பாடலிசைத்ததால் பாடும்மீன்கள் வாழும் வாவி என சர்வதேச புகழ் பெற்றது.

குறித்த மட்டக்களப்பு வாவியில் சுமார் 15 ஆயிரம் மீனவ குடும்பங்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. குறித்த ஆற்றுவாழைத் பெருக்கத்தால் மீனவர்கள் தோணிகளைத் தள்ள முடியாமலும் அவதியுறுவதாகத் தெரிவிக்கின்றனர். முதலையும், பாம்புகளும் அதனுள் மறைந்திருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றர். இவ் வாவியினை அழித்துவரும் ஆற்றுவாழைகளை அகற்றித்தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருகோணமலை மாவட்டத்தில் மூன்று நாட்கள் நீர் துண்டிப்பு

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் இன்று 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நீர் துண்டிக்கப்படும் என நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் எஸ்.ஜயந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை கந்தளாய் குளத்திலிருந்து நீர் சுத்திகரிப்புக்காக நீர் பெறப்படும் இடத்தில் (INTAKE) பராமரிப்பு சுத்தப்படுத்தும் வேலைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதால் பகல் நேரங்களில் முற்றாக நீர் வளங்கள் தடைப்படும் எனவும், இரவு நேரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால் கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, ஆண்டாங்குளம், நிலாவெளி மற்றும் திருகோணமலை பட்டணமும் சூழலும் போன்ற பகுதிகளில் நீர் விநியோகம் பாதிக்கப்படும் எனவும் தெரிவித்தார்

அவ்வேளையில் இரவு வேளைகளில் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படும் எனவும், நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நூல் வெளியீட்டு விழா

**'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்'**



லேக் ஹவுஸ், தினகரன்,தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல் பத்திகளின் தொகுப்பான 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி பி. ப 2.30 மணிக்கு கொழும்பு - 3 மென்டரினா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் ஏற்பாட்டில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொள்கிறார்.



**நூல் அறிமுக உரை:** இர்பான் இக்பால் (சோனகர் கொம். ஆசிரியர்)

**ஆசியுரை :** ரி. செந்தில்வேலவர், (பிரதம ஆசிரியர் தினகரன்)

**வாழ்த்துரைகள் :**

1. மாத்தளை எம். எம். பீர்முஹம்மது (மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவை. தலைவர்)
2. ரவூப் ஹக்கீம் (தேசிய தலைவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)
3. ரிசாட் பதியுதீன் (தேசிய தலைவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்)
4. என். எம். அமீன் (முன்னாள் தலைவர் முஸ்லிம் மீடியா போரம்)

**நூல் கருத்துரை :**

1. ஏ. எம் நஹியா (முன்னாள் பணிப்பாளர் நாயகம், புனர்வாழ்வு மீனவர், வீடமைப்பு மீனவர் நலன்)
2. கவிஞர் ரா. நித்தியானந்தன் (முன்னாள் விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

**நூலாசிரியர் உரை** : இக்பால் அலி

**ஏற்புரை :** சஹீட் எம். ரிஸ்மி (தேசியத் தலைவர், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை)

நூல் வெளியீட்டு விழாவில் அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் நாட்டின் உயர்ச்சிக்காகவும் மக்களின் மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி வரும் மக்கள் நலன் பேணும் துறை சார்ந்த இளம் தலைமைத்துவங்களையும் ஊடகத் துறை சார்ந்தவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் உள்ளடங்கும்.

எனவே உங்களின் பெறுமதியான கால நேரத்தை ஒதுக்கி இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மிக அன்புடன் வேண்டுகின்றோம்.

- ஏற்பாட்டுக் குழு

ஊடக அனுசரணை தினகரன் வாரமஞ்சரி

# அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனம்

## புதிய பணிப்பாளர்களுள் ஒருவராக தினகரன் ஊடகவியலாளர் றிசாத் ஏ. காதர்





கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரினால் அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.கே.எம். அஷ்ரப்பை தலைவராகக் கொண்டு நிமிக்கப்பட்டுள்ள இப்பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களான யு.எல். எம்.பௌஸ், ஊடகவியலாளர் றிசாத் ஏ. காதர் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாண கூட்டுறவுப் பதிவாளரும் ஆணையாளருமான பொறியியலாளர் என். சிவலிங்கம் குறித்த நியமனத்தினை வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் கூட்டுறவு ஆணையாளர் ஆகியோருக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பொதுச்சபை உறுப்பினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

குறித்த காலப் பகுதியில் சங்கத்தின் செயற்பாடுகளை எவ்வித தடங்கலும் இல்லாமல் முன்னெடுப்பதற்கென ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாகவும், கூட்டுறவுப் பதிவாளரும், ஆணையாளருமான என்.சிவலிங்கத்திற்குள்ள விசேட அதிகாரங்களுக்கு அமைவாகவே மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் கூட்டம் கடந்த 2022.08.23 அன்று கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும், பணிப்பாளர் சபையின் தலைவருமான ஏ.கே.எம். அஷ்ரப் தலைமையில் இடம்பெற்றது. சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள், வருமானமீட்டும் வழிகள் தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் யு.எல்.எம். பௌஸ், ஊடகவியலாளர் றிசாத் ஏ. காதர் ஆகியோருடன் சங்கத்தின் செயலாளர் எஸ்.எல். அல் முனவ்வர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆதம்பாவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

புதிய பணிப்பாளர் சபையின் கூட்டம் நிறைவுற்றதன் பின்னர் அட்டாளைச்சேனை மாற்றத்திற்கான அமைப்பின் தலைவர் த லைமையிலான ஒரு குழுவினரால் சங்கத்தினை சிறப்பாக வழிநடத்துவதற்கு ஏதுவாக, ஊழல் மோசடிகளை துரிதமாக விசாரணை செய்யுமாறு கோரி எழுத்துமூலமான மகஜர் கையளிக்கப்பட்டது. முன்னணியின் தலைவரும், தொழிலதிபருமான ஏ.சி.நியாஸ் தலைமையில் சுகாதார கல்வி அதிகாரி எம்.ஜே.எம். பைறூஸ், தொழிலதிபர் அஸ்வர் ஷாலி, ஊடகவியலாளர் அறூஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் கியாஸ், தாதிய உத்தியோகத்தர் ஹானிம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ஆளுநரின் வேண்டுகோளுக்கு அமைவாக, ஆணையாளரினால் பணிப்பாளர் சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர் றிசாத் ஏ காதர் குறித்த அமைப்பினரால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

**(திராய்க்கேணி நிருபர்)**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்

ஒருவன் மனத்தால் விரும்பினாலும் வெறுத்தாலும் அதை வெளிக்காட்டுவதில் முந்தி நிற்கும் முகத்தைக் காட்டிலும் அறிவு மிக்கது வேறு உண்டோ?

# தொற்று நோய்கள் பரவுவதால் முன்னெச்சரிக்கை அவசியம்!

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள நாடான போதிலும், ஒன்றுக்கு மேற்பட்ட வைரஸ் நோய்கள் மக்கள் மத்தியில் பதிவாகும் நிலைமை இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதார அமைச்சும் சுட்டிக் காட்டியுள்ளது.

'கொவிட் 19 தொற்று, நுளம்புகளால் பரப்பப்படும் டெங்கு காய்ச்சல், இன்புளுவென்ஸா மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்ற நோய்கள் தற்போது நாட்டில் காணப்படுவதாக சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்திருக்கின்றார்.

இந்நோய்கள் அனைத்தும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதும், குணப்படுத்திக் கொள்ளக் கூடியதும் ஆகும். ஆனால் இந்நோய்கள் தொடர்பில் அசிரத்தையோடும் கவனயீனமாகவும் நடந்து கொள்ளக் கூடாது.

கொவிட் 19 தொற்றானது தற்போது உலகில் பெரும் அச்சுறுத்தல் மிக்கதாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதன் தாக்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடிய தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்து சுமார் 20 மாதங்களாகியுள்ளது. அதன் பயனாக இத்தொற்றின் தாக்கம் பெரிதும் பலவீனமடைந்துள்ளது. அதனால்தான் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் இத்தொற்றுக்கு உள்ளானால் அதன் தாக்கம் வீரியமற்று காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இத்தொற்றானது ஒருவரில் இருந்து மற்றவருக்கு தொற்றக் கூடிய நோயாக இருப்பதால் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைப் பேணிக் கொள்ள வேண்டும். இந்நிலையில் இத்தொற்றின் பரவுதல் கடந்த வருடத்தின் பிற்பகுதியில் பெரு வீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டது. இத்தொற்றின் தாக்கமும் பரவுதலும் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்பதில் இருந்தும் மக்கள் தூரமாகத் தொடங்கினர்.

இதன் காரணமாக இத்தொற்று மீண்டும் தலைதூக்கும் அச்சுறுத்தல் தற்போது ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகவே இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகத் தினமும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அடையாளம் காணப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்தோடு தினமும் 4, 5 இற்கும் மேற்பட்டோர் இத்தொற்றினால் உயிரிழக்கவும் செய்கின்றனர். இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. இதே நிலைமை தொடருமாயின் இத்தொற்றின் கொத்தணிகள் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

அதன் விளைவாக கடந்த காலங்களைப் போன்று நாட்டை முடக்க வேண்டிய நிலைமை கூட ஏற்படலாம். அதனால் கொவிட் 19 தொற்றின் பரவுதலுக்கு துணைபுரியக் கூடிய செயற்பாடுகளில் இருந்து முற்றிலும் தவிர்ந்து கொள்வது அவசியம். அத்தோடு அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றவும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவும் தவறவும் கூடாது. இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக இத்தொற்றின் அச்சுறுத்தலை மீண்டும் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் டெங்கு வைரஸ் காய்ச்சலை பரப்பும் நுளம்புகள் தெளிந்த நீரில் பல்கிப் பெருகக் கூடிய பண்பைக் கொண்டுள்ளன. இதற்கு வீட்டு வளாகத்திலும் சுற்றுச்சூழலிலும் சேருகின்ற திண்மக் கழிவுப் பொருட்கள் பெரிதும் உதவக் கூடியனவாக அமைகின்றன.

ஆனால் தெளிந்த நீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்ளும் போது இந்நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். அதன் மூலம் டெங்கின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அத்தோடு இக்காய்ச்சலுக்கு உள்ளானால் அதற்கு ஆரம்ப கட்டத்திலேயே உரிய மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது இந்நோயின் அச்சுறுத்தலையும் பெரிதும் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் இன்புளுவென்ஸா மற்றும் வைரஸ் காய்ச்சலையும் கூட தவிர்த்துக் கொள்ளவும் சிகிச்சை மூலம் நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளவும் முடியும். ஆனால் நோய்கள் தொடர்பில் அவதானமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது இன்றியமையாததாகும். இதைவிடுத்து நோய்கள் தொடர்பில் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொண்டால் அவை அச்சுறுத்தல் மிக்கவையாகவும் தீவிரமாகப் பரவக்கூடிய வாய்ப்பை பெற்றுக் கொண்டவாகவும் அமைந்து விடும்.

அதன் காரணத்தினால் இன்றைய காலகட்டத்தில் காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் குறித்து முன்னவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். ஆரம்ப கட்டத்திலேயே உரிய மருத்துவ ஆலோசனைகளுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளவும் வேண்டும். இந்நோய்கள் பரவுவதற்கு துணைபுரியும் வகையில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவும் கூடாது. அவற்றின் ஊடாக இந்நோய்களின் பரவுதல் அச்சுறுத்தல்களையும் தாக்கங்களையும் கட்டுப்படுத்தி முறியடித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# அகவை அறுபதில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் அதிபர் சபாரத்னசிங்கி

வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் ஆலோசகரும், முன்னாள் தலைவரும், வட்டு. மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் என்பவற்றில் அதிபராகச் சிறப்புறப் பணியாற்றியவருமான நடராஜா சபாரத்னசிங்கி அவர்கள் இன்று அகவை அறுபது நிறைவு செய்து மணிவிழா காண்கிறார்.

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நன்கு அறியப்பட்ட ஆளுமையாளராகவும் சமூகப் பணியாளராகவும் சிறந்த அதிபராகவும் திகழ்ந்து சமூக நன்மதிப்பினைத் தன்வசமாக்கிக் கொண்டவர் சபாரத்னசிங்கி. மாணவப் பருவம் முதலே சமூகப்பணியிலும் தலைமைத்துவப் பண்புகளிலும் சிறந்து விளங்கிய சபாரத்னசிங்கி இன்று வட்டு. மத்திய கல்லூரி என அழைக்கப்படும் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றில் தன் கல்வியைத் தொடர்ந்தகாலத்திலேயே தன் ஆளுமைத்திறத்தால் பலரையும் ஈர்த்தவர்.

வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தில் இணைந்துகொண்டு சமூகப் பணியாற்றியவர். ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட சபாரத்னசிங்கியிடம் இருந்த ஆற்றலும் ஆளுமையும் சமூகப்பார்வையும் வினைத்திறனுள்ள நல்லாசிரியராக அவரை நிலைநிறுத்தின. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் அதிபர் சேவையினுள் இணைந்து வட்டு. மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் என்பவற்றில் அதிபராகப் பண்யாற்றி அந்தப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தார். கொட்டுடை, தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி கோயிலின் பரிபாலன சபைத் தலைவராகத் தொழிற்பட்டு ஆலய வளர்ச்சிக்காகச் செயற்படுபவர். தான் பணியாற்றிய அல்லது செயற்பட்ட துறைகளில் எல்லாம் தனிமுத்திரை பதித்தவர் சபாரத்னசிங்கி.

இன்று தனது சமூகப் பணிகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களெங்கும் விரிவாக்கிச் செயற்படுகின்ற அமைப்பாகத் திகழும் கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா என தன்கிளைகளை விரித்திருக்கின்ற வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் ஆலோசகராகச் செயற்படுகின்றார். நூற்றாண்டை நோக்கிப் பயணிக்கின்ற வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் வளர்ச்சியில் புத்தெழுச்சியில் சபாரத்னசிங்கியின் பணியும் பங்கும் நிராகரிக்கமுடியாதவை. சங்கத்தின் தலைவராகப் பத்து வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய இவரது காலத்திலேயே சங்கம் தனது செயற்பாட்டுப் பரப்பை விரித்துக்கொண்டது.



வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் அன்று திருஞானசம்பந்த வித்தியாசாலை என்ற பெயரொடு இயங்கிய பாடசாலையுடனான சங்கத்தின் உறவினை நெருக்கமாக்கிக்கொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் சங்கத்தின் உறுதியான பங்களிப்பினை படிப்படியாக அதிகரித்தார். அது மட்டுமன்றி பாடசாலைக்கென பழைய மாணவர் சங்கமொன்றினை ஸ்தாபித்து அதன் நீண்டகாலத் தலைவராகச் செயற்பட்டு பாடசாலையின் அபிவிருத்தியில் காத்திரமான பங்களிப்பினை வழங்கினார் சபாரத்னசிங்கி.

கல்லூரி பவளவிழா கண்ட பொழுது பவளவிழாச் சபையின் தலைவராகத் திறம்படச் செயற்பட்டு மூன்று நாட்கள் விழா சிறப்புற நடைபெறவும் அதனையொட்டி கல்லூரியில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவும் உழைத்தவர். பின்னர் 2000ஆம் ஆண்டில் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்று தான் பதவி வகித்த காலத்தில் கல்லூரி பலவழிகளிலும் உயர்வுபெற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

பாடசாலைக் காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கிய சபாரத்னசிங்கி ஆசிரியத்தொழிலில் இணைந்து பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகத் திகழ்ந்தார். பின்னர் கலைப் பட்டதாரியானதோடு பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி மற்றும் விவசாயம் ஹோட்டேல் முகாமைத்துவம் என்பவற்றில் டிப்ளோமா ஆகிய உயர்பட்டங்ளையும் பெற்றுச் சிறந்து விளங்குகிறார். அதிபர் சேவையில் இணைந்து வட்டு. மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் என்பவற்றில் அதிபராகச் சிறப்புறப் பணியாற்றியதோடு இன்று முதலாந் தர அதிபராக அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

**சிவகுருநாதன் கேசவன்...**
விரிவுரையாளர்,
சியன கல்வியியல் கல்லூரி

# ஒன்பதாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்க வறுமை இடம் தரவில்லை!

## ஆனாலும் நியூ ஜெருசலேம் பல்கலைக்கழகம் வழங்கிய டொக்டர் பட்டம் உட்பட ஏராளமான விருதுகள், கௌரவங்களை குவித்துள்ள சக்திவேல் என்னும் தமிழக ஆளுமை கவிஞர் கவிமுகில்

சக்திவேல் என்னும் சிறுவன் வறுமையில் வதைபட்டு, தனது 8ஆவது வயதில் 50 பைசா வருமானத்திற்காக சோடா நிறுவனத்தில் போத்தல் கழுவும் வேலையில் சேர்ந்தான். 9ஆம் வகுப்பு வரை வறுமையினால் மின்சார வசதி இல்லாத நிலையில், தெருவிளக்கு வெளிச்சத்தில் படித்தார். அதற்குப் பிறகு படிப்பைத் தொடர வழியில்லாமல் சோடா கம்பெனி, வெல்டிங் பட்டறை, பிரின்டிங் மில், பனியன் கம்பெனி என தனக்குக் கிடைத்த அனைத்து வேலைகளையும் செய்தார்.



பின்னர் கார் ஓட்டுநர் உரிமம் எடுத்துச் சென்னை சென்றார். முதலில் லொறி கிளீனராகத் தொடங்கி, கார் ஓட்டுநர், மளிகை வியாபாரம் எனத் தொடங்கி அவை சரி வராமல் சிங்கப்பூரில் கட்டடத் தொழிலாளியானார். பல முயற்சிகள் செய்து தோல்வியடைந்து, பல படிநிலைகளைக் கடந்து கார் விற்பனைத் தொழிலைத் தொடங்கினார். ஒரு நல்ல நிலைக்கு வந்தபோது வீதி விரிவாக்கத்திற்காக இவருடைய கடை இடிக்கப்பட்டது. 2 கோடி மதிப்புள்ள இடம், கடை அனைத்திற்கும் சேர்த்து வெறும் 75 இலட்சம் ரூபா நஷ்டஈடாகக் கிடைத்தது.

மீண்டும் சென்னை ஆதம்பாக்கத்தில் 'சக்தி கார்ஸ்' கம்பனியைத் தொடங்கினார். இந்நிறுவனம் பயன்படுத்தப்பட்ட கார்ஸ் விற்பனையில் முதன்மை நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

அனைத்துத் தடைகளையும் வெற்றிப் படிக்கட்டுகளாக மாற்றி இன்று தலைநகர் சென்னையில் வளர்ந்து நிற்கிறார். 25,000 சதுர அடிகளைக் கொண்ட கார் விற்பனை நிலையம், 100 பணியாட்கள், 200 கார்கள், மாதம் நூற்றுக்கணக்கான கார்கள் விற்பனை, வணிகத்திற்கான சிறந்த எண்ணற்ற விருதுகள், 50,000 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களின் நம்பிக்கை என மிகப் பிரமாண்டமாய் வளர்ந்து நிற்கிறது.

கவிமுகில் என்னும் புனைபெயரில் கவிமுகில் கவிதைகள், பூட்டாங்கயிறு, காலச்சப்பரம், வெள்ளாவி, தீக்கொழுந்து தேனருவி போன்ற கவிதை நூல்கள், முச்சந்தி போன்ற புதினங்கள், உரைநடை, மொழிபெயர்ப்பு நூல்கள் என 30 இற்கும் மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். அத்துடன் பதிப்புத்துறை, குறும்படம், திரைப்படப்பாடல்கள் எனத் தான் தொட்ட அனைத்திலும் வெற்றி பெற்றார். எண்ணற்ற விருதுகளையும் பெற்றுள்ளார். இவருடைய பல நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாணவர்கள் MPhil மற்றும் முனைவர் பட்டம் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அனைத்திற்கும் உச்சமாக அமெரிக்காவின் 'யேல்' பல்கலைக்கழகத்தில் இவரின் கவிதை ஒன்று பேராசிரியர் மறைமலை இலக்குவனாரால் மொழிபெயர்க்கப்பட்டுப் பாடமாக உள்ளது.





தனது கவி ஆசான் தாராபாரதி மற்றும் தமிழன்பன் பெயரில் அறக்கட்டளை, கவிமுகில் அறக்கட்டளைகளைத் தொடங்கி, எண்ணற்ற ஆளுமைகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள் எனப் பலருக்கும் விருதுகளும் வழங்கிப் பெருமைப்படுத்தி உள்ளார். அத்தோடு சாமானிய மக்களுக்குப் பல தொண்டுகள் செய்கிறார். இந்தக் கவிமுகிலுக்குக் கவிப்புயல், எழுச்சிக் கவிஞர், இலக்கியக் காவலர் எனப் பல பட்டங்கள் உள்ளன. சிறந்த பாடலாசிரியர் விருது, ராஜராஜன் பண்பாட்டுக் கழகத்தின் சாதனையாளர் விருது, தமிழ்நாடு அரசால் 2010 சிறந்த கவிதை நூலுக்கான விருது எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். ஒன்பதாம் வகுப்புக்குப் பிறகு படிக்க முடியாமல் போன சக்திவேலுக்கு 2015இல் நியூ ஜெருசலேம் பல்கலைக்கழகம் டொக்டர் பட்டம் வழங்கிகௌரவித்தது. இலக்கியம், வணிகம் என இரண்டிலும் வெற்றி பெற்ற சாதனையாளராக நிமிர்ந்து நிற்கிறார்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# நான் கண்ட அம்மா அமரர் தர்மாம்பாள்

அடி முடி தேடினாலும், அகராதியை புரட்டினாலும்,

முழுமையான அர்த்தம் காண முடியாத சித்திரம் 'அம்மா'

தன் மழலை முகம் பார்க்கும் முன்பே

தன் குழந்தையின் குரல் கேட்கும் முன்பே

தன் குழந்தையின் குரல் அறியும் முன்பே

தன் கருவில் இருக்கும் பிள்ளைச் செல்வம்

தன்னை காதலிக்கும் முதல் உயிர் அம்மா

எனும் ஜீவனே தன் வாழ்வின் இறுதியில் வயோதிபமும் நோயும் ஒன்று சேர்ந்த போதும் அவர்களின் பேச்சு, நடை, பாவனை அனைத்தும் ஒரு குழந்தைபோல் மாறிவிடுகிறது. அந்த வகையில் நான் கண்ட வயோதிப குழந்தைதான் 'அம்மா' அமரர் தர்மாம்பாள் அவர்கள்.



அம்மா பல சந்தர்ப்பங்களில் என்னை தனது பெறாமகளாக கூறி பல கதைகள் பேசி அன்பைப் பகிர்ந்ததை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. அன்னாரின் மறைவிற்கு சில தினங்கள் முன் அவரது வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தபோது ஆனந்தப் புன்னகையுடன் என்னை வரவேற்றார்.

அவரதும் கணவரதும் அன்பு மழையில் நானும் கரைந்து போனேன். முதிர்ந்த வயதிலும் அவர்கள் செல்லமாக பேசி மகிழ்ந்த அழகே தனி அழகு. இத்தனை பவ்வியமாக மனைவியைப் பார்க்கும் கணவர் கிடைத்தது அம்மாவின் பாச உறவிற்கு கிடைத்த பொக்கிஷம் என்றே கூறலாம். அப்படியான ஒரு கணவரைப் பற்றி இங்கே குறிப்பிடுவது மிகையாகாது. அம்மாவின் அன்புக் கணவரான டொக்டர் நவா என்று அழைக்கப்படும் நவரத்தினம் அவர்கள் கடந்த ஆறு வருடங்களாக சக்கர நாற்காலியின் உதவியுடன் இருந்தபோதும் ஒரு குழந்தை போல பராமரித்தும், அவரின் ஆசைப்படி கோவில்களுக்கும், கலை நிகழ்ச்சிகளுக்கும் அன்போடு அழைத்துச் செல்வார். தான் ஒரு வைத்திய கலாநிதி ஆக இருந்த போதிலும் ஒரு தாய் அன்பு கொண்ட தாதியைப் போல அவர் கரம் பிடித்த மனையாளை கையாண்ட விதம் பார்த்து வியந்து போனேன்.

அம்மா தனது பிள்ளைகள் ஜனா, கணேஷ் இருவருக்கும் மேலாக மகன் கணா, மருமகள் அகிலா ஆகிய இருவர் மீதும் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அத்துடன் பேரக்குழந்தைகளான கிரிஷா, லோஜன் இருவருடனும் அன்பாக விளையாடுவதும், அவர்களுடன் சேர்ந்து தேவாரம் பாடுவது நான் கண்ட காட்சிகள். இறுதியில் அம்மா அதே மந்திரமாவது நீறு என்ற பதத்துடன் விடை பெற்றதும் மறக்க முடியாத நினைவுகள் ஆகும்.

அம்மாவுக்கு எங்களின் ஆழ்ந்த அஞ்சலிகள்.

**சி. றசந்தினி...**
(தலைவர்) சிவன் மகளிர் மன்றம், லூயிஸம்.

### சிலுமின சிரேஷ்ட ஊடகவியலாளர்

# நிஸானி பன்னெஹக்கவுக்கு ஸ்ரீலங்கன் டொப்–100–2022 விருது




தைரியமாக முன்னேறி வாழ்க்கையை வெற்றிக் கொண்ட விசேடமானவர்களை பாராட்டும் ஸ்ரீலங்கா டொப் 100 2022 விருது விழா கடந்த 23ஆம் திகதி மாலை இலங்கை மன்றக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. லேக்ஹவுஸ் சிலுமின பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளரான சாமஸ்ரீ தேசாபிமானி நிஸானி லஸிகா ஹேரத் பன்னெஹக இவ்விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தைரியமான பெண்ணாக சவால்களுக்கு மத்தியில் தளராமல் இரவு பகல் பாராது மக்களுக்கு விடயங்களை அறியத் தருவதில் தமது பேனா மற்றும் புகைப்படக் கருவியை பயன்படுத்தியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டதாக விடயங்கள் தெரிவிக்கப்பட்டன .

# நெற்செய்கைக்கான டீசல் விநியோகம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கைதடி கமநலசேவை பிரிவுக்குட்பட்ட தனங்களப்பு கமக்கார அமைப்பின் கீழான நெற்செய்கையாளர்களுக்கான டீசல் விநியோகம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே இதுவரை காலபோக நெற்செய்கைக்கான டீசலைப் பெறாத தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் ஏக்கர் வரி சிட்டை ஆகியவற்றுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்கு சென்று நிலத்தை பண்படுத்துவதற்கான டீசலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# பிரஜைகள் குழு கூட்டம்

**திறப்பனை தினகரன், அநுராதபுரம் மேற்கு நிருபர்கள்**

அநுராதபுர மாவட்ட சர்வமத செயற்குழு ஏற்பாடு செய்த பிரஜைகள் குழுக்கூட்டம் கடந்த 21 அநுராதபுரம் கிரெஸ்டன் பார்க் ஹோட்டலில் இடம்பெற்றது. தேசிய சமாதான சபையின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் 40 பேர் கொண்ட குழுவினர் ஒன்று சேர்ந்திருந்தனர். இதில் சமயப்பெரியார்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் என பலர் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்கான தீர்வுகள் குறித்து இங்கு முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், எடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் மற்றும் இதற்கான சாத்தியக்கூறுகள் என்ன என்பது குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட பிரஜைகள் குழுவிற்கான வளவாளர்களாக அநுராதபுரம் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அதிகாரி சுமித் ரத்நாயக்க மற்றும் தேசிய சமாதான சபையின் திட்ட முகாமையாளர் சமன் செனவிரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# மன்னார் தெகேஹெவ பகுதியில் மின்கலம் திருட்டு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

காட்டுயானைகள் அத்துமீறி கிராமங்களுக்குள் நுழையாமல் இருக்க அமைக்கப்பட்டிருந்த மின்வேலியின் மின்கலம் திருடப்பட்டுள்ளன. இது 4 இலட்சம் ரூபா பெறுமதிமிக்கது என தெரியவருகின்றது. கட்டுப்பாட்டு மின்கல இயந்திரத்தை திருடிய சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பாதுகாப்பு கடமைக்காக இருந்த இரு சிவில் பாதுகாப்பு படை உறுப்பினர்களையும் விவசாயி ஒருவரையும் நேற்று முன்தினம் (23) கைது செய்துள்ளதாக மகவிலச்சிய பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் சந்தி தெகேஹெவ பகுதியில் மின்வேலிக்கு பொருத்தப்பட்டிருந்த மின்கல பாதுகாப்பிற்காக சிவில் பாதுகாப்பு வீரர்கள் இருவர் கடமையில் இருந்த போது அதனை பொருத்தப்பட்டிருந்த அறையின் முன் கதவு உடைக்கப்பட்டு அந்த திருட்டு நடந்துள்ளது.

இதுகுறித்து வனவிலங்கு பாதுகாவலர் ஒருவர் மகவிலச்சிய பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய அங்கு கடமையில் இருந்த சிவில் பாதுகாப்பு படை உறுப்பினர்கள் இருவர் உட்பட விவசாயி ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்திருட்டு தொடர்பில் சிவில் பாதுகாப்பு படை உறுப்பினர்களுக்கு தொடர்பு இருப்பதாக தெரிய வந்துள்ளதுடன் மூன்றாவது சந்தேக நபர் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வெலிகந்த மற்றும் அரலகங்வில பகுதிகளில் மேய்ச்சலுக்கு சென்ற கால்நடைகளை பார்க்கச் சென்ற இருவரை கடந்த 21 இரவு காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திவுலாகல மற்றும் வெலிகந்த திவுலாகல பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவருகின்றது.

அரலகங்வில கன்தேகம பகுதியைச் சேர்ந்த திருமணமாகாத நபரொருவரும் திவுலாகல பகுதியைச் சேர்ந்த 37 வயது நபர் ஒருவருமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரலுக்கான அழைப்பு

இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, "இலங்கை வங்கிச் சதுக்கம்" கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் 32 மாடிகளைக் கொண்ட தலைமை அலுவலகக் கட்டடம், இல. 75, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 03ல் அமைந்துள்ள பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ மனை மற்றும் கொழும்பு 01, உலக வர்த்தக மையக் கட்டடத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் அட்டை மையம் என்பவற்றின் கட்டடப் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல்.

## கேள்வி இல : P/PROC/2022/188

1. இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, "இலங்கை வங்கிச் சதுக்கம்" கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் 32 மாடிகளைக் கொண்ட தலைமை அலுவலகக் கட்டடம், இல. 75, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 03ல் அமைந்துள்ள பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ மனை மற்றும் கொழும்பு 01, உலக வர்த்தக மையக் கட்டடத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் அட்டை மையம் என்பவற்றின் கட்டடப் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்கு கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் தொகுதி பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட வகையில் சேவைகளை வழங்கக் கூடிய கட்டட பராமரிப்பு சேவை வழங்குனரிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலைகள் கோரப்படுகின்றன.

   குறிப்பிடப்பட்டுள்ள கட்டடங்களின் சுத்திகரிப்பைக் கையாள்தல் மற்றும் கட்டடத்தைப் பராமரித்தல் போன்ற வேலைகளை உள்ளடக்கியிருக்கும்.

   இப் பராமரித்தல் சேவையானது இலங்கை வங்கியின் மொத்த முகாமைத்துவத்தையும் திருப்திப்படுத்தும் வகையில் உயர் தரத்திலான கட்டடப் பராமரிப்புச் சேவையை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

   ஒப்பந்தமானது இரண்டு (02) வருடங்கள் செல்லுபடியாகும்.

2. தேசிய போட்டிகர ஏலவிலை செய்முறைக்கமைய ஏலவிலை கோரல்கள் மேற்கொள்ளப்படும்

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகைமை பெற வெற்றியீட்டுகின்றவர் :

   ய) இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வங்கிகளினாலோ புறக்கணிக்கப்பட்ட ஒப்பந்ததாரராக / வழங்குனராக பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

   டி) இலங்கையின் சட்டநபராகப் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

   உ) குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகளாக கட்டடப் பராமரிப்புச் சேவையினை வழங்கியவராகவும் கடந்த இரண்டு ஆண்டுகளுள் 5,000 சது.அடிப் பரப்பளவிற்குக் குறையாத ஒரு பல்மாடிக் கட்டடத்தில் செயற்பட்டிருக்க வேண்டும்.

   ன) கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்கான வருடாந்தப் பணப் புரள்வானது ரூ.30.00 மில்லியனுக்குக் குறையாது காணப்பட வேண்டும்.

   ந) ரூபா. 3.5 மில்லியனுக்குக் குறையாத திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

4. இவ்விலை கோரலுக்கு ஆர்வமுடையோர் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை 2022.08.25ஆம் திகதி முதல் 2022.09.14ஆம் திகதி வரை விலைகோரல் ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

5. விலைகூறல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் பூரணப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விலைகோரல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா 20,160.00 (ரூபா 18,000.00 + ரூபா 2,160.00 பெ.சே.வ 12%) VAT உடன் செலுத்தி 2022.08.25ஆம் திகதி முதல் 2022.09.14ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் 0900 மணி முதல் 1430 மணிவரை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

6. விலை கூறலின்போது இலங்கை வங்கியின் (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரிடமிருந்து பெறபபட்ட விலை கூறல்பத்திரங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். நகல்ப்படுத்தப்பட்ட விலைகூறல் ஆவணத்தின் மூலம் ஏலவிலை கூற இடமளிக்கப்பட மாட்டாது.

7. நகலுடனான முத்திரையிட்ட விலைகூறல்களை 2022.09.15ஆம் திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கித் தலைமையகத்தின் தரைத்தளத்தில் காணப்படும் பெட்டியினுள் இட வேண்டும் அல்லது, கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைகூறல்கள் திறக்காது நிராகரிக்கப்படும். விலைகூறல்கள் முடிவடைந்ததும் விலைகூறல்களை திறக்கும்போது விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

8. ஏலவிலை கூறல்கள் ஏலவிலை கூறல் முடிவடைந்து 91 நாட்கள் வரை செல்லுபடியாகும்.

9. ஏலவிலை கூறல்களானவை, இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையிற் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிற் பெற்றுக்கொண்ட ரூபா 1,070,000.00 (ரூபா பத்து இலட்சத்து எழுபதினாயிரம்) பெறுமதியானதும் 2023.01.12 வரை செல்லுபடியானதுமான பிணை முறியுடன் இணைத்து நிபந்தனையற்றதும் மாற்ற முடியாததும் தேவையின்போதானதுமான வங்கி உத்தரவாத வடிவிற் காணப்பட வேண்டும். வங்கி உத்தரவாதத்திற்குப் பதிலாக அதே தொகைக்கான வங்கி வைப்புக்கள் / வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். விலைகூறுபவரின் தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

10. முற்கூட்டிய விலைகூறல் கூட்டம் 2022.09.06ஆம் திகதி 1100 மணிக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", 14ஆம் தளத்தில் அமைந்துள்ள மாநாட்டறையில் இடம்பெறும்.

11. 1987ஆம் ஆண்டு 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் அல்லது திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய ஏலவிலை கூறலின் PCA3 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

12. ஏலவிலை கூறலில் கையொப்பமிடும் அங்கீகாரம் பெற்ற நபரின் கையொப்பமானது நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுமத்தினால் அல்லது அங்கீகாரம் பெற்ற நபரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஏலவிலை கூறலுடன் இணைக்கப்பட வேண்டும்.

13. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா ஏலவிலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

14. ஏலவிலை கூறுபவர் இலங்கை வங்கியில் தொழில் புரியும் எந்தவொரு தனிநபரினதும் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், பங்காளராயின் பங்காளரின் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனமாயின் இயக்குனரின் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

15. மேலதிக விபரங்களுக்காக கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி), பிரதான முகாமையாளரை தொலைபேசி இலக்கம் 0112544310 / 2204270 இல் தொடர்புகொள்ள முடியும்.

தலைவர்
தொகுழ பெறுகைக் குழு
மே / பா பிரதான முகாமையாளர்
(சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு)
14ஆம் மாடி, இல 01. BOC சதுக்கம்,
இலங்கை வங்கி மாவத்தை
கொழும்பு 01

www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏலவிலைக கோரலுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை வங்கிக்கான விரைவுத் தபாற் சேவையை வழங்குதல்

## கேள்வி இல. BOC/PROC/P/2022/215

1. இலங்கை வங்கி, "BOC சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01ல் அமைந்துள்ள இலங்கை வங்கி சார்பாக இலங்கை வங்கியின் தொகுதி பெறுகைக் குழுவின் தலைவர் இலங்கை வங்கிக்கு விரைவுத் தபாற் சேவையை வழங்குவதற்காக அச்சேவை வழங்குநர்களிடமிருந்து ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கோருகின்றார்.

   **வேலைகளானவை பின்வரும் செயற்பாடுகளைக் உள்ளடக்குகின்றது.**

   a) தலைமையகத்திலிருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை மாகாண அலுவலகங்கள், பிராந்தியக் கடன் நிலையங்கள் மற்றும் கிளைகளில் ஒப்படைத்தல்.

   b) மாகாண அலுவலகங்களில் இருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை பிராந்தியக் கடன் நிலையங்கள் மற்றும் கிளைகளில் ஒப்படைத்தல்.

   c) கிளைகள், பிராந்தியக் கடன் நிலையங்களிலிருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை மாகாண அலுவலகங்கள் மற்றும் தலைமையகத்தில் ஒப்படைத்தல்.

   d) மாகாண அலுவலகங்களில் இருந்து தபாற் பைகளைச் சேகரித்து அவற்றை தலைமையகத்தில் ஒப்படைத்தல்.

   e) தலைமையகத்தில் இருந்து சேகரிக்கப்படும் தபாற் பைகளை நகரக் கிளை, தப்ரபேன் கிளை, பெட்டா கிளை, கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வங்கி முதன்மை நிலையம் மற்றும் ஜிந்துப்பிட்டிய களஞ்சியத்திற்கு ஒப்படைத்து அவ்விடங்களில் சேகரிக்கப்பட்ட தபாற் பைகளை தலைமையகத்தில் ஒப்படைத்தல்

   இவ் விரைவுத் தபாற் சேவையானது உயர் தரத்திலும் இலங்கை வங்கியின் முகாமைத்துவத்திற்கு முழுத் திருப்தியை வழங்கும் வகையிலும் நிறைவேற்றப்பட வேண்டும்.

   ஆரம்ப ஒப்பந்தகாலமானது இரண்டு ஆண்டுகளாவதுடன் சேவை வழங்குநரின் ஏற்றுக்கொள்ளத்தக்க செயற்பாட்டிற்கமைய அவ் ஒப்பந்தமானது வங்கியின் தேவைக்கமைய அதே விலைகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைக்குட்பட்டு மேலும் ஒருவருட காலத்திற்கு நீடிக்கப்படலாம்.

2. ஏலவிலை கூறல்கள் தேசிய ஒப்பீட்டு நடைமுறைகளுக்கமைவாக இடம்பெறும்.

3. ஏலவிலை கூறுவதற்கு ஏலவிலை கோருபவர் கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

   a) இலங்கை வங்கியின் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ளடங்காதவராக இருத்தல் வேண்டும்.

   b) விரைவுத் தபாற் சேவை வழங்குநராக குறைந்தபட்சம் 03 வருடகால செல்லுபடியாகும் வியாபாரப் பதிவினைக் கொண்டிருக்க வேண்டும்

   c) கடந்த 03 ஆண்டுகளுக்குள் ஒரு நிறுவனத்திற்குரிய 200 இடங்கள் அல்லது அதற்கதிகமான இலங்கை முழுவதற்குமான விரைவுத் தபாற் சேவையை வழங்கும் செயற்றிட்டத்தைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

   d) இலங்கை முழுவதிலும் சேவையை வழங்கக்கூடிய வகையில் ஒவ்வொரு நிர்வாக மாகாணத்திலும் குறைந்தபட்சம் ஒரு பிராந்திய சேவை நிலையத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

   e) ஏலவிலை கூறுபவரால் முன்வைக்கப்படும் முறைமையினைச் செயற்படுத்துவதற்குப் போதியளவு எண்ணிக்கையிலான தனிப்பட்ட வாகனங்கள் போக்குவரத்து ஏற்பாடுகளுடன் இருக்க வேண்டும்.

   f) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதியாற்றலைக் கொண்டிருக்கவும் வேண்டும்.

      i. விரைவுத் தபாற் சேவைக்கான கடந்த மூன்று வருடங்களுக்குரிய குறைந்தபட்ச வருடாந்தப் பணப் புரள்வானது ரூ.50 மில்லியனாக இருக்க வேண்டும்.

      ii. திரவநிலைச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதிகள் குறைந்தபட்சம் ரூ.10 மில்லியனாகக் காணப்பட வேண்டும்.

4. இவ்விலை கூறலில் ஆர்வமுடையோர் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு வேலை நாட்களில் 2022.08.25ஆம் திகதி முதல் 2022.09.14ஆம் திகதி வரை 0900 மணி முதல் 1400 மணிவரை விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

5. விலைகூறல்களைத் தெரிவிக்க ஆர்வமுடையோர் பூரணப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் இருபத்தி இரண்டாயிரத்து நானூறு ரூபாயைச் (ரூ.22,400/-) VAT உடன் (ரூ.20,000/- +2,400/- VAT உடன்) செலுத்தி கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் 2022.08.25ஆம் திகதி முதல் 2022.09.14ஆம் திகதி வரை 0900 மணி முதல் 1400 மணிவரை எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

6. கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் பெறப்பட்ட ஏலவிலை கூறல்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். நகற்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல் ஆவணங்களின் மூலம் ஏலவிலைகூறல்களை சமர்ப்பிக்க முடியாது.

7. நகலுடனான முத்திரையிட்ட விலைகூறல்களை 2022.09.15ஆம் திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கித் தலைமையகத்தின் வரவேற்புப் பகுதியில் காணப்படும் பெட்டியினுள் இட வேண்டும் அல்லது, கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைகூறல்கள் திறக்காது நிராகரிக்கப்படும். விலைகூறல்கள் முடிவடைந்ததும் விலைகூறல்களை திறக்கும்போது விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

8. ஏலவிலை கூறல்கள் ஏலவிலை கூறல் முடிவடைந்து 91 நாட்கள் வரை செல்லுபடியாகும்.

9. முற்கூட்டிய விலைகூறல் கூட்டம் 2022.09.05ஆம் திகதி 1100 மணிக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", 14ஆம் தளத்தில் அமைந்துள்ள மாநாட்டறையில் இடம்பெறும்.

10. ஏலவிலை கூறல்களானவை, இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையிற் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிற் பெற்றுக்கொண்ட ரூ.1,600,000.00 (ரூ.பதினாறு இலட்சம்) பெறுமதியானதும் 2023.01.12 வரை செல்லுபடியானதுமான பிணை முறியுடன் இணைத்து நிபந்தனையற்றதும் மாற்ற முடியாததும் தேவையின்போதானதுமான வங்கி உத்தரவாத வடிவிற் காணப்பட வேண்டும். வங்கி உத்தரவாதத்திற்குப் பதிலாக அதே தொகைக்கான வங்கி வைப்புக்கள் / வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். விலைகூறுபவரின் தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

11. 1987ஆம் ஆண்டு 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் அல்லது திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய ஏலவிலை கூறலின் PCA3 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

12. ஏலவிலை கூறலில் கையொப்பமிடும் அங்கீகாரம் பெற்ற நபரின் கையொப்பமானது நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுமத்தினால் அல்லது அங்கீகாரம் பெற்ற நபரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஏலவிலை கூறலுடன் இணைக்கப்பட வேண்டும்.

13. ஏலவிலை கூறுபவர் இலங்கை வங்கியில் தொழில் புரியும் எந்தவொரு தனிநபரினதும் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், பங்காளராயின் பங்காளரின் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும், மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனமாயின் இயக்குனரின் கணவன் / மனைவி அல்லது நெருங்கிய உறவினர் இல்லை எனவும் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

14. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா ஏலவிலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

15. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி), பிரதான முகாமையாளரை தொலைபேசி இலக்கம் 0112204260 / 0112544310, தொலைநகல் இலக்கம் 0112449629, மின்னஞ்சல் முகவரி : properties@boc.lk இல் தொடர்புகொள்ள முடியும்.

தலைவர்
தொகுதி பெறுகைக் குழு
மே / பா பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு,
14ஆம் தளம், இல.01, "BOC சதுக்கம்",
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




# நாகதேவன்துறை இறங்குதுறைக்கு செல்வதற்கான பாதையை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட நாகதேவன் துறை இறங்கு துறைக்கு செல்வதற்கான பாதை இதுவரை புனரமைக்கப்படவில்லையென கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கடலுக்குச் செல்ல முடியாமல் உள்ளதாக ஞானிமடம் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட நாகதேவன் துறை இறங்குதுறையானது நீண்ட காலம் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

அதாவது 1990 ஆண்டுக்குப் பின்னர் இவ்வீதி புனரமைக்கப்படவில்லை. அத்துடன் 1993 ஆம்



ஆண்டு இடம் பெற்ற யுத்தம் காரணமாக மோசமாக இவ்வீதி சேதமடைந்ததுடன் 2012ஆம் ஆண்டு வரைக்கும் எந்தவித தொழில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத பகுதியாக இது காணப்பட்டது.. தற்போது இப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறு கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடல் பகுதிக்கு செல்லும் பாதையும் இறங்க துறையும் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதனால் கடல் பெருக்கு காலங்களிலும் ஏனைய காலங்களிலும் கடற்றொழிலுக்கு செல்வதில் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதாவது இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே இவ்வாறு ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் நீளமான வீதியையும் இறங்கு துறையினையும் புனரமைத்து தருமாறு பிரதேச கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தென்னிந்திய தமிழ் திரைப்பட நடிகர் பிளாக் பாண்டி நேற்று யாழ். வேலணை பகுதியில் 500 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கினார். பிளாக் பாண்டியின் "உதவும் மனிதம்" அமைப்பினூடாக, இலங்கை மக்களுக்கு கை கொடுப்போம் எனும் துணைப் பொருளில் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கும் செற்பாடு ஐந்து மாவட்டங்களிலும் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

# கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்

## நெடுங்கேணியில் போராட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற தொனிப்பொருளில் வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பினால் நெடுங்கேணி கந்தசாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று (24.08) முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலியுறுத்தி இடம்பெற்று வரும் நூறு நாள் செயற்றிட்டத்தில் இருபத்தி நான்காம் நாளான நேற்றைய போராட்டத்தில் தமது கோரிக்கைகளை ஊடகங்கள் வாயிலாக தெரிவித்திருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கௌரவமான உரிமைக்கான மக்கள் குரல், மக்கள் குரல் ஓய்ந்திருந்ததே தவிர ஒருகாலமும் ஒடுங்கியிருக்கவில்லை, ஜனநாயக பாதையில் மக்களே மக்களுக்காய் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததோடு வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளின் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் விசேட கவனம்




கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப் பணிமனை மட்டத்திலான தேவைகள் முதற்கொண்டு, பாடசாலைகளின் பௌதீக, ஆளணி மற்றும் இதர பற்றாக்குறைகள், உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றுக்கான தீர்வை படிப்படியாகப் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுவை 2020ஆம் ஆண்டு பொறுப்பெடுத்த சிறிது காலத்திலேயே மாவட்டத்தின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்த இரண்டு கல்வி வலயங்களை உருவாக்கும் திட்டத்தை நிறைவேற்றியிருந்த அமைச்சர் டக்ளஸ், புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்டோரை தனித்தனிக் குழுக்களாகச் சந்தித்து அந்தந்த வலயங்களின் தேவைகள் குறித்தும் விசேடமாக ஆராய்ந்துள்ளார்.

# நல்லூரில் மணல் சிற்பம்

யாழ்.விசேட நிருபர்





வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகின்ற நிலையில் ஆலய முன்றலில் ஒவ்வொரு நாளும் உருவாக்கப்பட்டு வரும் மணல் சிற்பங்கள் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.

யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகுமார் என்பவரால் உருவாக்கப்பட்டு வருகின்ற இந்த மணல் சிற்பங்கள் பக்தர்களை பெரிதும் கவரும் வகையில் உள்ளன.

உள்நாட்டு பக்தர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இந்த மணல் சிற்பங்களை பார்வையிட்டு வருகின்றனர். அரச உத்தியோகத்தரான இவர், தனது சந்தோஷத்திற்காகவும் பார்க்கின்ற ஏனையவர்களின் சந்தோஷத்திற்காகவும் இந்த மணல் சிற்பங்களை வடிவமைப்பு செய்து வருவதாக தெரிவிக்கின்றார். கடந்த காலங்களில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவங்களின் போதும் இவர் மணல் சிற்பங்களை வடிவமைத்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு சிகரெட்டுகளை விற்றவர் கைது காரைநகரில் சம்பவம்

யாழ்.விசேட நிருபர்

வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சிகரெட்டை காரைநகர் பகுதியில் விற்பனை செய்த நபரொருவரை பொலிஸ் விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 1200 சிகரெட்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபரும், மீட்கப்பட்ட சிகரெட்டுகளும் ஊர்காவற்துறை பொலிஸாரிடம், பொலிஸ் விசேட அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# தாலிக்கொடி அறுப்பு; வசமாக சிக்கிய இராணுவ வீரர்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் தாலிக்கொடியை அறுத்து தப்பி சென்ற இராணுவவீரர் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா கனகராயங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் கழுத்திலிருந்த தாலிக்கொடியினை சிவில் உடையில் வந்த இராணுவ வீரர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் அறுத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் விரைந்து செயற்பட்ட அப்பகுதி பொதுமக்களால் அவர் துரத்திப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பறித்து சென்றவர் சிவில் உடையில் நடமாடிய இராணுவீரர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# நல்லூர் தேர் வெள்ளோட்டம்



யாழ்.விசேட நிருபர்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்றைய தினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பரிபாலகர்களான மாப்பாண முதலியார் பரம்பரையில் வந்துதித்த மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலியார் காலத்தில் ஆலயத்துக்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது.

அந்த தேர் பழுதடைந்த நிலையில் இருந்தமையால் அதன் அபாயத்தை உணர்ந்த ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார், புதிய தேர் ஒன்றை 1964 ஆம் ஆண்டு திருப்பணி நிறைவேற்றி, தானும் வடம் பிடித்து இழுத்து இரதோற்சவத்தை தொடக்கி வைத்தார்.

அந்த தேரே 1964ஆம் ஆண்டு முதல் மகோற்சவ தேர்த்திருவிழாவின் போது, இழுக்கப்பட்டு வந்தது.

அந்த தேரே தற்காலத்தில் மீண்டும் புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று நேற்றைய தினம் புதன் கிழமை காலை 7 மணிக்கு வெள்ளோட்டம் இடம்பெற்றது.

அதேவேளை நேற்றைய தினம் மாலை சப்பர திருவிழா இடம்பெற்றது.

இன்று வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய சங்காபிஷேக நிகழ்வு

மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா கடந்த மாதம் 6 ஆம் திகதி இடம் பெற்றதை தொடர்ந்து 48 நாட்கள் மண்டல அபிஷேகம் இடம்பெற்று நேற்று செவ்வாய்க்கிழமை (23) காலை சங்காபிஷேக நிகழ்வு வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் தர்ம ஆதீன மடத்தின் இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் முன்னிலையில் சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (23) காலை 9 மணிக்கு யாகங்கள் இடம்பெற்று பரிவார மூர்த்திகளுக்கான யாகங்களும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கும்பங்கள் உள்வீதியுலா எடுத்துவரப்பட்டு பிள்ளையார், சிவன், அம்பாள் ஆகியோருக்கு கும்ப நீர் ஊற்றப்பட்டு வெகு விமர்சையாக 1008 சங்காபிஷேகம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர தேனமுது கும்பாபிஷேக விசேட மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் நூலாசிரியர் தம்பிப்பிள்ளை முத்துக் குமாரசுவாமி நூலை வெளியிட்டு வைக்க, தர்ம ஆதியின இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் நூலை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் பயணிகள் பஸ்சை செலுத்திய இ.போ.ச சாரதி மானிப்பாயில் கைது

யாழ்.விசேட நிருபர்

மதுபோதையில் பயணிகள் பஸ்சை செலுத்தி சென்ற இலங்கை போக்குவரத்து சபை சாரதி மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர் நோக்கி பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்சை செலுத்திய சாரதி மதுபோதையில் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, மானிப்பாய் பொலிஸார் சண்டிலிப்பாய் கட்டுடை பகுதியில் பஸ்சை மறித்து சாரதியை பரிசோதித்துள்ளனர்.

அதன்போது சாரதி மதுபோதையில் இருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரை கைது செய்துள்ளனர். அதேவேளை பிறிதொரு சாரதியை வரவழைத்து பஸ்சை அனுப்பி வைத்தனர்.

# காரைநகர் பிரதேச சபைக்கு புதிய தவிசாளர்

யாழ்.விசேட நிருபர்

காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் க.பாலச்சந்திரன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிசாளராக இருந்த சுயேட்சை குழு உறுப்பினர் மயிலன் அப்பாத்துரை தனது பதவியை இராஜினாமா செய்தமையால் , தவிசாளர் பதவி வெற்றிடமாகவிருந்தது.

புதிய தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. அதன் போது , ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகிய இரு கட்சிகளினதும் தலா இரு உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளிக்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும் , சுயேட்சை குழுவை சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஒரு உறுப்பினருமாக 7 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்தனர்.

அதனை தொடர்ந்து தவிசாளர் தெரிவு ஆரம்பமான போது, கூட்டமைப்பின் உறுப்பினர் விஜயராசா, சக உறுப்பினர் க. பாலச்சந்திரனை தவிசாளராக முன்மொழிந்தார். அவருக்கு எதிராக வேறு பெயர்கள் பிரேரிக்கப்படாமையால் , பாலச்சந்திரன் போட்டியின்றி ஏக மனதாக தவிசாளராக தெரிவானார்.





பொது நிர்வாக சர்வதேச நிறுவனத்தின் (PSI) ஏற்பாட்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, தொழிற் பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல் தொடர்பில் இரண்டு நாள் வதிவிட செயலமர்வு கொள்ளுப்பிட்டியிலுள்ள ரேனுகா ஹோட்டல் கேட்போர் கூடத்தில் நடைப்பெற்றது. செயலமர்வில் தென்கிழக்காசியாவிற்கான கூட்டிணைப்பாளர் கொட்சின் மோஹனதாஸ் தலைமையில் இ.தொ.காவின் உபதலைவரில் ஒருவரான பரத் அருள்சாமி,கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*(எஸ்.தேவதாஸ், சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்)*

# அதிபர் ஒருவரை நியமிக்கக் கோரி மாணவர்கள், பெற்றோர் போராட்டம்



***பரந்தன் குறுப் நிருபர்***

*கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு அதிபர் ஒருவரை நியமிக்கக் கோரி மாணவர்கள், பெற்றோர் போராட்டமொன்றை நேற்று மேற்கொண்டனர்.*

*கிளிநொச்சி தெற்கு வலயக்கல்வி பிரிவுக்குட்பட்ட அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு, கடந்த 3 மாதங்களாக அதிபர் நியமிக்கப்படவில்லை. கடமையிலிருந்த அதிபர் பாடசாலை பொறுப்புக்களிலிருந்து விலகியுள்ள போதும் புதிய அதிபர் நியமிக்கப்படவில்லை.*

*இதேவேளை, பிரதி அதிபரும் ஓய்வு நிலையை பெற்றுள்ள நிலையில், மேலதிக சேவைக்காக இணைக்கப்பட்டுள்ளார்.*

*42 ஆசிரியர்களையும், 800 மாணவர்களையும் கொண்ட தேசிய பாடசாலையின் நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுக்கப்படவில்லை.*

*இந்நிலையில், நிரந்தரமாக அதிபர் ஒருவரை நியமித்து தருமாறும், கல்விசார் விடயங்களை தடையின்றி மேற்கொள்ள நடவடிக்கை விரைந்து எடுக்குமாறும் நேற்று போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.*

# கொரிய மொழியறிவு தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு

***தலவாக்கலை குறுப் நிருபர்***

*ஜப்பான் மற்றும் கொரிய நாடுகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஜப்பான், கொரிய மொழியறிவு தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. ஜப்பான், கொரிய மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற வளவாளர்களால் இந்த கருத்தரங்கு நடாத்தப்படுகின்றது. இந்த பாடநெறியானது பகுதி நேர கற்கை நெறியாக எதிர்வரும் நாட்களில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. பயிற்சி நெறி கட்டணங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு வதிவிட முகாமையாளர், ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் 0512222762/ 0512223492 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.*


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கம்பஹா**

**நலன்புரி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல்**

**மீரிகம ஆதார வைத்தியசாலை - 2022/2023**

மீரிகம ஆதார வைத்தியசாலையின் நலன்புரி சிற்றுண்டிச்சாலையை 2022/2023ஆம் வருடங்களில் நடாத்திச் செல்வதற்கு தகுதியானவரைத் தெரிவு செய்வதற்காக மீரிகம ஆதார வைத்தியசாலையால் 2022-09-16ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் இதற்கு இயைபான விபரங்களை மீரிகம ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அதற்கான கேள்விப் படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத 300.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 1000.00 கேள்விக் கட்டணத்தை மீரிகம ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் மீரிகம ஆதார வைத்தியசாலையில் 2022-08-26ஆம் திகதி முதல் 2022-09-15ஆம் திகதி வரை வழங்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை முத்திரைக்குறி பொறித்து 2022-09-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் மீரிகம ஆதார வைத்தியசாலையின் நலன்புரி சிற்றுண்டிச்சாலையின் பொருட்டு ''மருத்துவ அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, மீரிகம'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நலன்புரி சிற்றுண்டிச்சாலை - மீரிகம ஆதார வைத்தியசாலை'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்தவுடன் 2022-09-16ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீரிகம ஆதார வைத்தியசாலையின் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மருத்துவர் திரு. டப்ளியூ. எம். ஐ. கே. வன்னிநாயக்க,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம்,**
**கச்சேரி கட்டிடத்தொகுதி,**
**கம்பஹா.**

**தொலைபேசி: 033-2222874**



## சீத்தாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

## கேள்வி அறிவித்தல் மற்றும் அட்டவணை

பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சபைக்குரித்தான ஆதனங்களை வருடாந்த குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

தமது அடையாள அட்டையைச் சமர்ப்பித்து அறிவித்தலின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் கேள்விப் படிவங்களில் மட்டுமே கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக மட்டுமே செலுத்துதல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். கேள்விப் படிவக் கட்டணத்திற்கு வெட் வரி மற்றும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளைச் செலுத்துவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

2022-09-09ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்பதுடன் 2022-09-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தவிசாளர், சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல'' எனும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். 2022-09-12ஆம் திகதி சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இச்சந்தர்ப்பத்தில் சமுகம் தந்து கலந்துகொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் - 2022-09-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் - 2022-09-12ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
கேள்விப் படிவங்கள் திறத்தல் - 2022-09-12ஆம் திகதி கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்தவுடன்

தெரிவு செய்யப்படும் கேள்விதாரருக்கு கேள்வித் தொகையை ஒரே தடவையில் செலுத்த முடியும் என்பதுடன் அவ்வாறல்லாவிடின் 06 தவணைக் கட்டணத்தை பிணையாக சபையில் வைப்புச் செய்து 2022-09-19ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும். கேள்வித் தொகையை தவணை முறையில் செலுத்த முடியும். உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன் பிரதேசத்தின் பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொண்ட சொத்துச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதன் பின் முதலாவது கோரிக்கையாளர் அந்த கேள்வியை நிராகரித்தால் கேள்விப் பிணைத் தொகை சபைக்குரித்தாக்கப்படும் என்பதுடன் சகல விண்ணப்பதாரர்களிடமும் முதலாம் விண்ணப்பதாரரின் கேள்வித் தொகைக்கு கேள்வியை ஏற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டை விசாரித்தறிந்து அவ்வாறு இணங்காவிடின் மூன்றாம் கேள்விதாரரின் கேள்வித் தொகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கேள்விப் படிவம் நகல் பிரதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளும் ஆதனத்தின் பெயரைக் குறிப்பிட்டு கேள்விப் படிவத்தை தாங்கிய உறை முத்திரையிடப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை ஹங்வெல்ல சீத்தாவக்க பிரதேச சபையின் பிரதான அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் அறிந்துகொள்ளலாம். கேள்விகள் தொடர்பில் பிரதேச சபையின் கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

அனைத்து குத்தகைதாரராலும் தம்மால் கோரப்படும் தொகைக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட வெட் வரி மற்றும் ஏனைய வரிகளைச் செலுத்துவதற்கு இணங்குதல் வேண்டும்.

**பீ. ஜயந்த ரோஹன,**
**தலைவர்,**
**சீத்தாவக்க பிரதேச சபை,**
**ஹங்வெல்ல.**

**2022-08-23ஆம் திகதி**
**பிரதான அலுவலகத்தில்.**

| தொ. இல. | தொழில் முயற்சியின் பெயர் | கால எல்லை | கேள்விப் பிணைப் பணம் ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | குறைந்த பட்ச கேள்வித் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | **கஹஹேன வாரச் சந்தை (செவ்வாய்க்கிழமை)**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. வாரச் சந்தையின் முன்புறத்தில் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் வேண்டும். குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றின் பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றில் விலை 100.00 ரூபா) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 30,000.00 | 750.00 | 255,000.00 |
| 02 | **ஹங்வெல்ல வாரச் சந்தை (திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை)**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. வாரச் சந்தையின் முன்புறத்தில் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் வேண்டும். குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றின் பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றில் விலை 300.00 ரூபா) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 250,000.00 | 1,500.00 | 7,750,000.00 |
| 03 | **ஹங்வெல்ல 4ம் இலக்க பன்றியிறைச்சிக் கடை**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்கக் கூடாது) | 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 200,000.00 | 1,500.00 | 2,090,100.00 |
| 04 | **ஹங்வெல்லை 1ம் 2ம் இலக்க மாட்டிறைச்சிக் கடைகள்**<br>(நிபந்தனைகள்: கேள்விதாரரால் இறைச்சி பெற்றுக்கொள்ளப்படும் கொலைக்களம் அனுமதிக்கப்பட்ட கொலைக்களம் என்பதற்கான ஆவணச் சான்றிதழை கேள்வி விண்ணப்பம் மீளக் கையளிக்கப்படும் வேளையில் சமர்ப்பித்தல் வேண்டும். குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும்) | 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 250,000.00 | 1,500.00 | 3,652,220.00 |
| 05 | **ஹங்வெல்ல 3ம் இலக்க ஆட்டிறைச்சி கோழியிறைச்சிக் கடை.**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும்.) | 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 150,000.00 | 1,500.00 | 1,050,225.00 |
| 06 | **பாதுக்க வாரச் சந்தை (செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகள்)**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. வாரச் சந்தையின் முன்புறத்தில் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் வேண்டும். குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றின் பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றில் விலை 300.00 ரூபா மீன் கூடாரமொன்றில் விலை 800.00) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 250,000.00 | 1,500.00 | 6,250,000.00 |
| 07 | **பாதுக்க ஆட்டிறைச்சி, கோழியிறைச்சிக் கடைகள் - இடம் - பாதுக்க புதிய சந்தையின் மீன் கடை 4ம், 5ம் இலக்க இடங்கள்**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்கக் கூடாது) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 100,000.00 | 1,500.00 | 967,500.00 |
| 08. | **பாதுக்க பன்றியிறைச்சிக் கடை**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்கக் கூடாது) | 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 100,000.00 | 1,500.00 | 594,011.00 |
| 09 | **பாதுக்க விளையாட்டரங்கின் 06 தென்னை மரங்களின் தேங்காய் விளைச்சல்** | 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 500.00 | 100.00 | 4,620.00 |
| 10 | **பாதுக்க புதிய சந்தையின் 01ஆம் இலக்க மீன் கடை**<br>(நிபந்தனைகள்: மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு பேணுதல் வேண்டும்.) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 15,000.00 | 500.00 | 36,000.00 |
| 11 | **பாதுக்க மாட்டிறைச்சிக்கடை இடம் - பாதுக்க புதிய சந்தையின் மீன் கடை 2ம், 3ம் இலக்க இடங்கள்**<br>(நிபந்தனைகள்: கேள்விதாரரால் இறைச்சி பெற்றுக்கொள்ளப்படும் கொலைக்களம் அனுமதிக்கப்பட்ட கொலைக்களம் என்பதற்கான ஆவணச் சான்றிதழை கேள்வி விண்ணப்பம் மீளக் கையளிக்கப்படும் வேளையில் சமர்ப்பித்தல் வேண்டும். குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும்) | 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 150,000.00 | 1,500.00 | 7,760,665.00 |
| 12 | **கொஸ்கம வாரச் சந்தை (செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்)**<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். வாரச்சந்தை நாட்களில் மட்டும் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். மீன் கழிவுகள் குத்தகைதாரரால் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு இடமளித்தல் கூடாது. வாரச் சந்தையின் முன்புறத்தில் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் வேண்டும். குப்பைகளை வகைப்படுத்துவதற்கு செயலாற்றல் வேண்டும். வாரச்சந்தை இடப்பரப்பிற்குள் மட்டும் செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் மற்றும் அவற்றின் பராமரித்து பேணிக் கொண்டு செல்ல குத்தகைதாரர் செயற்படுதல் வேண்டும். கழிவுநீர் குழிகளை முறையாகப் பராமரித்தல் வேண்டும். கூடாரமொன்றில் விலை 300.00 ரூபா) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 250,000.00 | 1,500.00 | 2,000,000.00 |
| 13 | **கொஸ்கம வாரச்சந்தை பன்றியிறைச்சிக் கடை (செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்)**<br>இடம் - வாரச்சந்தை மீன் கடை 42ஆம் இலக்க இடம்<br>(நிபந்தனைகள்: குத்தகைதாரரினால் நீர் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். குத்தகைதாரரால் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக கழிவுப் பொருட்களை உள்ளிடும் கலியொன்றை சீத்தாவக்க பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரித்து கொண்டு நடாத்துதல் வேண்டும். விற்கப்படாமல் எஞ்சியுள்ள இறைச்சியை அடுத்த நாளில் விற்கக் கூடாது) | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 20,000.00 | 750.00 | 102,000.00 |
| 14 | **அருக்வத்த பொது மயானத்தின் விளைச்சல்கள்** | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 500.00 | 100.00 | 7,500.00 |
| 15 | **பாதுக்க பொது விளையாட்டரங்கின் 20'x12' அறையை குத்தகைக்கு வழங்குதல்** | 2022-10-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரை | 20,000.00 | 750.00 | 225,000.00 |

# பொறியிடப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஆய்வுகூடத்திற்கான நுண்ணுயிரியல் ஊடகத்தை வழங்கி விநியோகித்தல்

## மில்கோ (பிரைவட்) லிமிட்டட்

(அரசுடமை தொழில் முயற்சி)

மில்கோ (பிரைவட்) லிமிட்டட் ஆனது, இலங்கையில் 'ஹைலன்ட்' குழு நாமத்தின் கீழ் பால் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல், பால் உற்பத்திகளை உற்பத்தி செய்வதில் ஓர் முன்னணி நிறுவனம் ஆகும். வழங்குநர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து ஆய்வுகூடத்திற்கான நுண்ணுயிரியல் ஊடகத்தை வழங்கி விநியோகிப்பதற்காக ஆர்வமுள்ளவர்களிடமிருந்து மில்கோ (பிரைவட்) லிமிட்டட் இன் கேள்விக் குழுத் தலைவரால் கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

- பொறியிடப்பட்ட விலைமனு இல - SQ/2022/P/253
- மூடப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 19.09.2022 பி.ப. 3.00 மணிக்கு

**ஆய்வுகூடத்திற்கான நுண்ணுயிரியல் ஊடகத்தை வழங்கி விநியோகிப்பதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்கள்**

| உருப்படி விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| Potato Dextrose Agar - 500 gm | 03 போத்தல்கள் |
| Tributyrin Agar 100 ml | 525 போத்தல்கள் |
| MacConkey Broth (Purple 500 gm) | 20 போத்தல்கள் |
| Brilliant Green Bile (2%) Broth - 500gm | 03 போத்தல்கள் |
| Milk Agar - 500gm | 08 போத்தல்கள் |
| Peptone Water - 500gm | 01 போத்தல் |
| Agar Bacteriological Powder - 500gm | 04 போத்தல்கள் |
| Yeast Extract - 500gm | 01 போத்தல் |

**பொதுவான நிபந்தனைகள்:**

1. படிவம் மற்றும் விலைமனு நிபந்தனைகளை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை 2022.09.16 வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 இற்கிடையில், கொழும்பு-03, காலி வீதி, இல. 345, 5ஆம் மாடி, மில்கோ (பிரைவட்) லிமிட்டட் இன் கொள்வனவுப் பிரிவிலிருந்து, படிவங்கள் மற்றும் விலைமனு நிபந்தனைகளை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
2. முத்திரையிட்ட விலைமனுக்கள் கொழும்பு-03, காலி வீதி, இல. 345, ஐந்தாம் மாடியில் மில்கோ (பிரைவட்) லிமிட்டட், கேள்விக் குழுவின் தலைவருக்கு முகவரியிடப்படல் வேண்டும். அல்லது மூடப்படும் நேரம் மற்றும் திகதிக்கு முன்னர் கொள்வனவுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். பொறியிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மூடப்படும் நேரம் மற்றும் திகதி விடயத்தின் பெயர், பொறியிடப்பட்ட விலைமனு இலக்கத்தை தயவு செய்து குறிப்பிடவும்.
3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.09.19ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு மேற்படி முகவரியிலுள்ள மில்கோ (பிரைவட்) லிமிட்டட் இன் கொள்வனவுப் பிரிவில், மூடப்பட்டு பின்னர் திறக்கப்படும்.
4. எந்தக் காரணமும் தரப்படாமலேயே எல்லா முத்திரையிட்ட விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை கேள்விக்குழு கொண்டிருக்கும்.
5. மில்கோ ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த கேள்வியில் பங்குபற்ற முடியாது.

பொறியிடப்பட்ட விலைமனு அறிவித்தல் பற்றிய எந்த மேலதிக விபரங்கள், தகவல்கள், அல்லது தேவைப்படும் தெளிவுபடுத்தல்களை மில்கோ (பிரைவட்) லிமிட்டட் இன் முகாமையாளர் கொள்வனவு தொ.பே. இலக்கம் -011-4500530-4 அல்லது முகாமையாளர் தர உறுதி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி - 011-2586174 (நீடிப்பு 275) இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர் - கேள்விக் குழு**
**மில்கோ (பிரைவட்) லிமிட்டட்**
**ஐந்தாம் மாடி**
**இல. 345, காலி வீதி,**
**கொழும்பு-03**

# அற்றோனித்தத்துவப் பத்திரத்தை இரத்துச்செய்தல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 16ம் திகதி ஐப்பசி மாதம் 2021ம் ஆண்டு திகதியிடப்பட்டு Canada ஐச் சேர்ந்த Barrister & Solicitor P.Kayilasanathan முகதாவில் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோனித்தத்துவப்பத்திரமானது, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா நாகசெல்வம் ராஜகாந்தன் (தே.அ.அ.இல 743473629V) என்பவரின் பெயரில் கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தற்போது 132, Baycliff Drive, Whitby, Ontario, LIP 1V5, Canada இல் வசிக்கும் திரு. ஜேம்ஸ் அமிர்தபாலன் தனபாலசிங்கம் மற்றும் திருமதி. டொடில்டா உசைன் அமிர்தபாலன் ஆகிய எங்களால் நிறைவேற்றப்பட்ட அற்றோனித்தத்துவப்பத்திரம் 18ம் திகதி ஆவணி மாதம் 2022ம் ஆண்டு முதல் மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. 18.08.2022 முதல் மேற்குறிப்பிட்ட அற்றோனித்தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோனித்தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டோம்.

**திரு. ஜேம்ஸ் அமிர்தபாலன் தனபாலசிங்கம்**
**திருமதி. டொடில்டா உசைன் அமிர்தபாலன்**

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

Repeat Your Ad For Better Offers

# இலங்கை திரிபோஷ லிமிட்டட்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 500 மெ.தொ. சோயாவிற்கான பெறுகை

**Bid No. SLTL/TB/13/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 500 மெ.தொ. சோயாவை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (உயர்மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011 2236 588/ 011 2237 418.
5. 2022.09.14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 27,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.09.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அதாவது 2022.09.15 ஆம் திகதியிலிருந்து 2022.12.15 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,250,000 ரூபா பெறுமதியானதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து அதாவது 2022.09.15 ஆம் திகதியிலிருந்து 2023.01.12 ஆம் திகதி வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் (2022.09.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு).

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**உயர்மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17, கப்புவத்த,**
**ஜா-எல.**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இல. | கேள்விப் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/07/PT/6363(MP) | 02 Nos. complete engine (OM 906 LA,Mercedes Benz) for the Terberg Yard Tractors | 240,000.00 | 3,500.00 | 2022.09.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6364(MP) | Engine spares for Terberg Terminal Tractors | 80,000.00 | 1,000.00 | 2022.09.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/PT/6368(MP) | 100 Nos. Hydraulic Tank Mounts for RAM Spreaders at JCT | 22,500.00 | 1,000.00 | 2022.09.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/22/PT/01/016 | 01 No. Server for Payroll | 50,000.00 | 1,000.00 | 2022.09.15ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/22/PT/03/017 | 02 Nos. 30 KVA Online UPS Units | 50,000.00 | 1,000.00 | 2022.09.15ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/13/058 | 66 Nos. of Sea Water Gate Valves for M/T Suranimala & M/T Gotaimbara | 32,000.00 | 1,000.00 | 2022.09.16ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/04/055 | Trouser Black, Blue & White – 1700 Nos. | 30,000.00 | 1,000.00 | 2022.09.16ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022. ஒகஸ்ட் 26 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

(அரசுரிமை தொழில்முயற்சி)

# பாவனைக்கு உரித்தற்ற வாகனங்களை விற்பனை செய்தல் (SQ/2022/P/214)

பண்ணை விலங்கு, பண்ணை மேம்படுத்தல் மற்றும் பாலுற்பத்தி மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் ''ஹைலண்ட்'' வர்த்தக நாமத்தின் கீழ் வியாபார முயற்சியினை மேற்கொள்ளும் ஓர் அரசுடமை கொண்ட முதற்தர பாற்பண்ணை நிறுவனமாகும்.

எமது நிறுவனம் கொழும்பு, திகன (கண்டி), பொலன்னறுவை மற்றும் அம்பேவெல போன்ற நகரங்களில் தமது உற்பத்தி தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மில்கோ (பிரைவட்) லிமிடெட்டின் கேள்விச் சபைத் தலைவரினால் 2022-09-29ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை முத்திரைக் குறிபொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதிவிலக்கம் | உற்பத்தி வருடம் | தயாரிப்பு | மாதிரி | ஆவணக் கட்டணம் | மீளளிக்கப் படும் வைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 43-8131 | 1993 | Lanka Ashok Leyland | Comet super Lorry full body container | 2,500.00 | 10,000.00 |
| 2 | 42-7300 | 1990 | ISUZU | HTR11JJ Lorry Full body Aluminium | 2500.00 | 10,000.00 |
| 3 | GF-8256 | 2000 | TATA | SE-1613 Lorry Chassis Without milk Tank | 2500.00 | 10,000.00 |
| 4 | GF-8259 | 2000 | TATA | SE-1613 Lorry Chassis Without milk Tank | 2500.00 | 10,000.00 |
| 5 | GK-7727 | 2000 | TATA | SE-1613 Lorry Chassis Without milk Tank | 2500.00 | 10,000.00 |
| 6 | GV -1175 | 2002 | TATA | SE-1613 Lorry Chassis Without milk Tank | 2500.00 | 10,000.00 |
| 7 | GV-8665 | 2002 | TATA | SE -1613 Lorry Full Aluminium Body | 2500.00 | 10,000.00 |
| 8 | GU-9250 | 2002 | TATA | SE -1613 Lorry Full body Container type | | |
| 9 | GX-4229 | 2002 | TATA | SE -1613 Lorry Full Aluminium Body | 2500.00 | 10,000.00 |
| 10 | GX-4227 | 2002 | TATA | SE -1613 Lorry Full Aluminium Body | 2500.00 | 10,000.00 |
| 11 | HL-0633 | 2003 | ISUZU | NKR 55 L Freezer truck with Body | 2500.00 | 10,000.00 |
| 12 | HL-1171 | 2003 | ISUZU | NKR 55 L Freezer truck with Body | 2500.00 | 10,000.00 |
| 13 | HL-1175 | 2003 | ISUZU | NKR 55 L Freezer truck with Body | 2500.00 | 10,000.00 |
| 14 | GU-4879 | 2002 | BAJAJ | Boxer Motor Cycle | 1000.00 | 5,000.00 |
| 15 | 43-9329 | 1997 | TATA | SE-1210 Lorry Chassis without Milk Tank As Scrap. | 2500.00 | 10,000.00 |

கேள்வி கோரல்களுக்கான விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் கீழே தரப்பட்டுள்ளன:

குறிப்பிட்ட கேள்வி கோரல் படிவங்களை மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவு பிரிவான ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-3, என்ற முகவரியில் 29-09-2022ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஒவ்வொரு வாகனத்திற்கும் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை வெவ்வேறான வகையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

1) மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்களை 2022-09-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் மாலை 3.00 மணி வரையில் வாகனத்திற்கான உதவி முகாமையாரிடம் (தொடர்பிலக்கம்: 071-6855022) முன் அனுமதியுடன் கொழும்பு-05, இல. 45, நாவல வீதி, நாரஹென்பிட்டி, மில்கோ (பிறைவட்) லிமிடட்டில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் பரீசித்தல் கட்டணமான 1000.00 ரூபாவை நாரஹென்பிட்டி தொழில்சாலைப் பிரிவு சிறாப்பருக்கு வாகனத்தைப் பரீட்சிப்பதற்கு முன் செலுத்துதல் வேண்டும்.
2) மோட்டார் சைக்கிள்களுக்கான மீளளிக்கப்படும் வைப்பு 5,000.00 ரூபா என்பதுடன் ஏனைய வானங்களுக்கான மீளளிக்கப்படும் வைப்பு 10,000.00 ரூபாவாகும். குறிப்பிட்ட கட்டணத்தை கொழும்பு-03, இல. 435, காலி வீதி, தலைமை அலுவலகத்தின் கொள்வனவுப் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இந்தக் கொடுப்பனவிற்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான படிவங்கள் அனுப்புதல் வேண்டும்) வேண்டுகோள் கடிதம் இன்றி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
3) கேள்விகள் 2022-09-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் இதே நாளில் பி.ப. 3.00 மணிக்கு கொழும்பு-03, இல. 435, காலி வீதி, 5ஆம் மாடி, மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முத்திரைக் குறிபொறிக்கப்பட்ட கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பாவிக்க முடியாத வாகனங்களின் விற்பனை, முத்திரைக் குறி பொறித்த கேள்வியின் இலக்கம், முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் என்பவற்கைக் குறிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரத்திற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொள்வனவுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திய மற்றும் முழுமையற்ற கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4) விலைமனு ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5) எக்காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு வாகனத்தையும் விற்பனையிலிருந்து விலக்கிக் கொள்வதற்கும் மற்றும் எல்லா விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
6) மில்கோ ஊழியர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் இந்த கேள்வியில் பங்குபற்றமுடியாது.

இந்த விலைக்கோரல் பற்றிய மேலதிக தகவல், விபரம் அல்லது விளக்கம், தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் வாகனத்திற்கான உதவி முகாமையாளரிடமிருந்து 071-6855022 (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை) எனும் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக அல்லது மில்கோ (பிறைவட்) லிமிட்டட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து 011-4500530-534 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**ஐந்தாம் மாடி,**
**இல. 345, காலி வீதி, கொழும்பு-03.**

# கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

## விலைமனுக்கோரல் (IFB)

### வடிவமைப்பு மற்றும் கட்டுமானச் செயற்திட்டம்

கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரியின் சார்பாக பிரதான கொள்முதல் குழு மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான விலைக்கோரலுக்கு உங்களை முன்கூட்டியே தகுதிப்படுத்தியுள்ளது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர். | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ). | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CLT/WK/2022/009 | நுழைவு கட்டிடம் | 10,000.00 | 100,000.00 | 13-09-2022 14.00 மணி |

1. படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச் செலுத்தப்படாத மனுக் கட்டணத்தைச் செலுத்தி **2022.08.25 முதல் 2022.09.13 ஆம் திகதி 14.00 மணி** வரை விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. தகுதியான மனுதாரர்கள் பின்வரும் தகுதி அளவுகோல்களுக்கு இணங்க வேண்டும்.
3. மேலதிக விபரங்கள் மற்றும் மனு ஆவணங்களை **இல.320,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10. இல் அமைந்துள்ள கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிப் பிரிவில்** பரிசீலனை செய்து பெற்றுக்கொள்ளலாம்.
4. மனு ஆவணங்களை **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிப் பிரிவில்** இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.
5. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **90 நாட்கள்.**
6. மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் நிதிப் பிரிவிற்கு** கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
8. ஒப்பந்த காலம் ஒரு மாதமாகும்.
9. மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதி **2022.09.13 ஆம் திகதி 14.00 மணி** வரையாகும் மற்றும் அதன் பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
10. மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,
**கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**
இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

# விலைமனுக் கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம் 027/T/2022**

### கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையக் கட்டிடத்தின் கொன்கிரீட் கூரையின் பெனல் இடையே மூட்டிணைப்புகளுக்காக சீலண்ட் தடவுதல்

**(APPLY SEALANT FOR JOINTS BETWEEN CONCRETE PANELS –TOP ROOF SLAB TERMINAL BUILDING AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் முனையக் கட்டிடத்தின் கொன்கிரீட் கூரையின் பெனல் இடையே மூட்டிணைப்புகளுக்காக சீலண்ட் வழங்குதல் மற்றும் தடவுதலுக்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் C6 தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்த, ஒப்பந்ததாரர்களுக்கு மாத்திரமே இவ் ஒப்பந்தத்திற்காக விண்ணப்பிக்க முடியும். விலைக்கேள்வியாளர் இந்த தாபனத்தில் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட விலைக்கேள்வி பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக இருத்தல் வேண்டும்.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகள் திருப்பிச் செலுத்தப்படாத ரூபா மூவாயிரம் (ரூபா. 3,000.00) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரினால் எழுத்து மூலமான கோரிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2022.08.26 ஆந் திகதி முதல் 2022.09.19 ஆந் திகதி வரை வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவையேற்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ கிளை அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2022.09.20 ஆந் திகதி புதன் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரச மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் (ரூபா. 50,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2022.09.01 ஆந் திகதி மு.ப. 10.00 இற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் சிவில் பொறியியலாளர் (பராமரிப்பு) பிரிவின் கருத்தரங்கு அறையில் நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வியுடன் தொடர்புடைய கூட்டத்தில் பங்கேற்குமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கு மற்றும் அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

எந்தவொரு காரணத்தையும் சேர்க்காமல் நிறுவனத்தின் நலனுக்காக விலைக்கேள்வியின் அனைத்து அல்லது எந்தப் பகுதியையும் நிராகரிப்பதற்கான உரிமை தவிசாளர், பெறுகைக் குழுவிடம் உள்ளது.

மேலதிக தகவல்கள் பெற வேண்டுமாயின், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம் 0112264103 / 011-2264102 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# விலைமனுக்கான அழைப்பு

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட்

**விலைமனு இல. : 041/T/2022**

### 168,000 TOILET PAPER ROLLS வழங்கல்

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் - கட்டுநாயக்க, கொழும்பு விமானநிலையம் - இரத்மலானை, மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் - மத்தளை, யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் - பலாலி மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம் - மட்டக்களப்பு ஆகிய விமானநிலையங்களில் பயன்படுத்துவதற்காக 168,000 TOILET PAPER ROLLS வழங்கலுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதி ஒன்றை மீளளிக்கப்படாத ஐயாயிரம் ரூபா (ரூபா 5,000.00) தொகையை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள விநியோகச் சங்கிலி முகாமைத்துவ பிரிவுக்கு செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு அதற்காக விலைமனுதாரர்கள் மூலம் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள விநியோகச் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து 2022.08.25 ஆம் திகதி தொடக்கம் 2022.09.12 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை விலைமனு ஆவணத் தொகுதியை பெற்றுக்கொள்ள முடியும். தேவையெனில் மேலுள்ள விலைமனு ஆவணங்களை விநியோகச் சங்கிலி முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.

விலைமனுதாரர்கள் தமது விலைமனுவை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட்டில் அமைந்துள்ள விநியோகச் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்களை இடும் பெட்டியில் சேர்க்க முடியும். மேலும், விலைமனுதாரர்களின் விருப்பின்படி அவர்களின் முத்திரை இடப்பட்ட விலைமனுக்களை மேலுள்ள முகவரிக்கு தனிப்பட்ட முறையிலும் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பது 2022 செப்டெம்பர் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00க்கு முடிவுறுவதோடு குறித்த விலைமனுக்களை திறப்பது அதனோடு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள விநியோகச் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் அதில் பங்கேற்க முடியும்.

விலைமனு பிணைக்காக இலங்கையில் இயங்கும், மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கி ஒன்றில் தலைவர், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட்டிற்கு கோரும்போது செலுத்தப்படும் வகையில் வழங்கப்படும் எட்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் ரூபா (ரூபா 898,000.00) பெறுமதி கொண்ட வங்கிப் பிணை ஒன்றை, விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை பெற வேண்டுமாயின், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட் நிறுவனத்தின் விநியோகச் சங்கிலி முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-2264103/ 011-2264104 இற்கு அழைப்பது, head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிரைவெட்) லிமிடெட்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

## துறைமுக கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

# விலைமனுக்கோரல்

**விலைக்கேள்வி இலக்கம்: 005/T/2022**

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பதவியணியினருக்கு அலுவலக போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்

**மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் - மத்தளை**
**'D' தொகுதி**
**2022- (ஒப்பந்தத்தினை வழங்கியதன் பின்னர் ஒரு வருட காலத்திற்காக)**

1. மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின், (ம.இ.ச.வி) வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் பதவியணியினருக்கு அலுவலக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பின்வரும் "D" தொகுதி பாதைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட போக்குவரத்துச் சேவை வழங்கப்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன. ஒப்பந்தம் செய்துகொண்ட காலப்பகுதிக்குள் விலைக்கூறுநரால், வழங்குகின்ற பேருந்துகளின், வாகன பதிவு செய்யும் சான்றிதழ்களில் விலைக்கூறுநர் தற்போதைய உரிமையாளராக அல்லது வழங்கப்படுகின்ற பேருந்துகள் விலைக்கூறுநரின் பேரில் மற்றும் குத்தகை கம்பனியொன்றின் பேரில் சார்பிலா உரிமையாளராக நிதிசார் குத்தகை பெற்றிருப்பது அவசியமானதாகும்.

| சாலை இலக்கம் | தொகுதி " D" பாதை ஆரம்பிக்கும் இடம் மற்றும் சேரிடம் | ஆகக் குறைந்த ஆசனங்களின் எண்ணிக்கை (மேலதிக ஆசனங்களைத் தவிர்ந்த) |
|---|---|---|
| D-1 | யோதகண்டிய (வேலை முறையேடு) - (ம.இ.ச.வி) மத்தளை | 58 |
| D-2 | ஏபிலிபிட்டிய (வேலை முறையேடு) - (ம.இ.ச.வி) மத்தளை | 58 |
| D-3 | ஹம்பாந்தோட்டை (வேலை முறையேடு) - (ம.இ.ச.வி) மத்தளை | 58 |

2. மேற்குறிப்பிட்ட "D" தொகுதியின் கீழ் காட்டப்பட்டுள்ள அனைத்து பேருந்துகள் பாதைகளுக்காக விலைக்கூறுநரால் விலைக்குறிப்பீடுகளை முன்வைத்தல் வேண்டும்.
3. விலைக்கேள்வி ஆவணங்கள் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவினால் 2022 ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் 2022 செப்தெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை வாராந்தம் வேலை செய்யும் நாட்களில் வெளியிடப்படுவதுடன் ஒரு இணைக்கோப்புக்காக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா ஆன (ரூபா பத்தாயிரத்து ஐந்நூறு மாத்திரம்) கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.
4. இந்த விலைக்கேள்வி அழைப்பு தொடர்பாக ஆரம்ப சுருக்கமான முறையில் தெளிவுபடுத்தும் கூட்டம் 2022 செம்தெம்பர் மாதம் 02 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தலைவர் - மனித வளங்கள், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, புதிய நிர்வாகக் கட்டிடம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற இடத்தில் இடம்பெறும்.
5. அனைத்து விலைக்கேள்விகளுக்காக திருப்பி செலுத்தப்படுகின்ற ரூபா (ரூபா ஆறு இலட்சம் மாத்திரம் விலைக்கேள்வி பிணைமுறி சமர்பிக்கப்பட வேண்டியதுடன், அக்குறித்த விலைக்கேள்வி பிணைமுறி வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் நிதிப் பிரிவிற்கு செலுத்திய பற்றுச்சீட்டு வடிவத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, அங்கீகாரம் பெற்ற, வணிக / விஷேட வங்கியொனறின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி பிணைமுறி வடிவத்தில் அல்லது சமர்ப்பிக்கப்பட வேண்டும். அனைத்து விலைக்கேள்வி பிணைமுறிகள், விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியிலிருந்து அடுத்துவரும் 120 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
6. கம்பனியின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி அழைப்பு இணைப்பு கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு இயைவாக பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி அழைப்பு இணைக்கோவை மற்றும் அதன் பூர்த்தி செய்யப்பட்ட பிரதி வெவ்வேறாக கடித உறைகளிலிட்டு முத்திரை குறியிடப்பட்டு உறைகளில் இடதுபக்க மேல் மூலையில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு முறையே குறிப்பிடுதல் வேண்டும்:
   "விலைக்கேள்வி ஆவணங்களின் மூலப்படிவம் - "அலுவலக போக்குவரத்துச் சேவை வசதிகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல் 'D'- தொகுதி - 2022 (ஒப்பந்தத்தினை வழங்கியதன் பின்னர் மூன்று வருட காலத்திற்காக)
   விலைக்கேள்வி ஆவணங்களின் பிரதி - அலுவலக போக்குவரத்துச் சேவை வசதிகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்- 'D'- தொகுதி - 2022 (ஒப்பந்தத்தினை வழங்கியதன் பின்னர் மூன்று வருட காலத்திற்காக)
   இவ்வாறு முத்திரை குறியிடப்பட்ட இவ்விரு கடித உறைகளும் ஒரு உறையிலிட்டு அதனையும் பாதுகாப்பான முறையில் முத்திரை குறியிடப்பட்டு "விலைக்கேள்வி அழைப்பு பத்திரம்- அலுவலக போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக விலைக்கே்ள்விகளை அழைத்தல்- 'D' தொகுதி - 2022 (ஒப்பந்தத்தினை வழங்கியதன் பின்னர் ஒரு வருட காலத்திற்காக) ஆக மற்றும் விலைக்கேள்வி இலக்கத்தையும் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புவதாயின் "தவிசாளர், பெறுகை குழு இலக்கம் -01, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவிற்கு என்ற விலாசத்திற்கும் அல்லது வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க" என்ற இடத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை குழு இலக்கம் - 01 இற்குரிய ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் 2022 செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் வைப்பீடு செய்தல் வேண்டும்.
7. முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களை பொறுப்பேற்றல் 2022 செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவு செய்யப்பட்டவுடன் உடனடியாக விலைக்கேள்விகளைத் திறத்தல் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற இடத்தில் இடம்பெறும். விலைக்கேள்விகளை திறக்கும் வேளையில் விலைக்கூறுநருக்கு அல்லது அவரின் அனுமதிபெற்ற பிரதிநிதிக்கு பங்குகொள்ள முடியும்.
8. இந்த விலைக்கேள்வி அழைப்புடன் தொடர்பான மேற்படி தகவல்கள் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தலைவர்- மனிதவள அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 2251837 மூலம் அல்லது 2263513 மூலம்பெற்றுக் கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாராநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க**

# ஆசியக் கிண்ண வலைபந்து: இலங்கை அணியில் தர்ஜினி

சிங்கப்பூரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண வலைபந்தாட்டப் போட்டியில் விளையாடவுள்ள இலங்கை அணியில் நட்சத்திர வீராங்கனையும் ஆசியாவின் அதி உயரமான வலைபந்தாட்ட வீராங்கனையுமான தர்ஜினி சிவலிங்கம் இணைக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் வலைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றிவரும் தர்ஜினி சிவலிங்கம் அங்கிருந்து நேரடியாக சிங்கப்பூர் சென்று இலங்கை குழாத்துடன் இணையவுள்ளார்.



ஆசிய கிண்ண வலைபந்தாட்டப் போட்டியில் ஐந்து தடவைகள் சம்பியனான இலங்கை, கடைசியாக 2018இல் வென்ற கிண்ணத்தை தக்க வைத்துக்கொள்ளும் என நம்பப்படுகிறது.

இலங்கை வலைபந்தாட்ட அணியின் தலைவியாக மத்திய நிலை வீராங்கனை கயஞ்சலி அமரவன்ஷ நியமிக்கப்பட்டுள்ளதுடன் உதவித் தலைவியாக பக்கநிலை எதிர்த்தாடும் வீராங்கனை துலங்கி வன்னித்திலக்க செயற்படவுள்ளார்.

அனுபவசாலிகளும் சிரேஷ்ட வீராங்கனைகளுமான தர்ஜினி சிவிலங்கம், முன்னாள் அணித் தலைவி சத்துரங்கி ஜயசூரிய, கயனி திசாநாயக்க, ஹசித்தா மெண்டிஸ், செமினி அல்விஸ் ஆகியோருடன் தீப்பிகா அபயகோன், ஹாஷினி டி சில்வா, மல்மி ஹெட்டியாராச்சி, இதுஷா ஜனனி, ரஷ்மி திவ்யாஞ்சலி ஆகியோரும் வலைபந்தாட்டக் குழாத்தில் இடம்பெறுகின்றனர்.

ஆசிய வலைபந்தாட்ட சம்பியன்ஷிப் (ஆசிய கிண்ணம்) போட்டிகள் சிங்கப்பூரில் செப்டெம்பர் 3ஆம் திகதியிலிருந்து 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

11 நாடுகள் பங்குபற்றும் 13ஆவது ஆசிய கிண்ண வலைபந்தாட்டப் போட்டி நான்கு குழுக்களில் லீக் முறையில் நடத்தப்படும்.

# முதல் இன்னிங்ஸில் இலங்கை இளையோர் அணி 407 ஓட்டம்

இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிராக முதலாவது இளையோர் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி 407 ஓட்டங்களை குவித்து ஸ்திரமான நிலையை பெற்றது.

எனினும் சம்போர்ட்டில் நடைபெறும் இந்தப் போட்டியின் முன்றாவது நாளான கடந்த செவ்வாய்க்கிழமை (23) ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் கைவசம் இருக்க 179 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.



301 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பெற்ற நிலையில் முன்றாவது நாள் ஆட்டத்தில் தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை இளையோர் அணி ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை பறிகொடுத்தது. 132 ஓட்டங்களுடன் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த அசித வன்னிநாயக்க மேலதிகமாக ஒரு ஓட்டத்தைக் கூட பெறாமல் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அடுத்த பந்திலேயே லஹிரு தேவடகே முகம்கொடுத்த முதல் பந்தில் தமது விக்கெட்டை பறிகொடுத்தார்.

எனினும் அணித்தலைவர் டி சில்வா மற்றும் வினுஜ ரன்புல் 7ஆவது விக்கெட்டுக்கு 76 ஓட்ட இணைப்பாட்டத்தை பெற்று அணியை வலுப்பெறச் செய்தனர். இதன்போது டி சில்வா 133 பந்துகளில் 62 ஓட்டங்களை பெற்றதோடு ரன்புல் 85 பந்துகளில் 42 ஓட்டங்களை குவித்தார்.

இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 407 ஓட்டங்களை பெற்றது.

முதல் இன்னிங்ஸில் 387 ஓட்டங்களை பெற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து இளையோர் அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களை பெற்றிருந்தது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ........................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ........................

வாக்களித்தவர் பெயர் : ........................

முகவரி : ........................

மொபைல் இல. : ........................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500    2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 27-08-2022    இல. 22




# சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுனர் போட்டிக்கு ரிட்ஸ்பரி அனுசரணை

இலங்கையின் முதல்தர சொக்லேட் நமமான ரிட்ஸ்பரி 10ஆவது தடவையாகவும் 90ஆவது ஜோன் டார்பட் பாடசாலை மெய்வல்லுனர் போட்டிக்கு பூரண அனுரணை வழங்க முன்வந்துள்ளது.

மெய்வல்லுனர் போட்டிகளை மேலும் வலுப்படுத்துவதோடு இலைமறை காய்களாக இருக்கும் விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்துக்கு கொண்டுவரும் நோக்கில் இந்த அனுசரணை வழங்கப்படுகிறது.

இவ்வருடம் சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுனர் போட்டிகள் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட போட்டிகளாக இரு பிரிவுகளில் நடத்தப்படுகிறது. இதில் 800 பாடசாலைகளில் இருந்து இதுவரை விண்ணப்பங்கள் கிடைக்கபெற்றுள்ளதோடு 1,800 போட்டியாளர்களை எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்தனர். வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகும் போட்டிகள் ஒக்டோபர் 01 ஆம் திகதி வரை நடைபெறும்.




CBL Foods International Ltd இன் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கடந்த செவ்வாயன்று (23) தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர் கலாநிதி குசலா பெர்னாண்டோவிடம் ரிட்ஸ்பரி ஜோன் டார்பட் மெய்வல்லுனர் போட்டிக்கான அனுசரணை காசேலையை உத்தியோகபூர்வமாக கையளித்தார். இந்நிகழ்வில் பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கத்தின் மேற்பார்வை அதிகாரி சம்பத் ஜயசேன, கல்வி அமைச்சின் பிரதி விளையாட்டுப் பணிப்பாளர் உபாலி அமரதுங்க, அருண லியனபத்திரன Ritzbury Categary Manager ஆகியோரை படத்தில் காணலாம். *(படம்: விமால் கருணாரத்தன)*

# சாஹிரா கல்லூரி வர்ண இரவில் விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பு

ருசைக் பாரூக்

கொழும்பு சாஹிரா கல்லூரியின் வர்ண இரவு கல்லூரி கபூர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் நடைபெற்றது. ஜோர்ஜியா நாட்டுக்கான கொன்சுலர் ஜெனரல் டயன் கோமஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.





கூடைப்பந்து, குத்துச்சண்டை, கிரிக்கெட், கால்பந்து, ஹொக்கி, ரக்கர், செஸ், கராத்தே, துப்பாக்கிச் சுடுதல், நீச்சல் மற்றும் சாரணர் போன்ற பல்வேறு விளையாட்டுகளில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

2019/2020 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர் எம்.என்.எம். ஷமாஷ் மற்றும் 2019 ஆம் ஆண்டு அமெரிக்காவின் மேற்கு வர்ஜீனியாவில் நடைபெற்ற 24ஆவது உலக சாரணர் ஜம்போரியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய பர்ஹாத் பாரூக் ஆகியோர் பிரதம அதிதி டயன் கோமஸிடமிருந்து விருதைப் பெற்றுக்கொண்டனர்.

## சர்வதேச செய்திகள்

# தாய்லாந்துப் பிரதமர் பிரயுத் பதவியிலிருந்து இடைநிறுத்தம்

தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஒசாவின் தவணைக் காலம் பற்றி சட்ட சவால் விடுக்கப்பட்ட நிலையில் அந்நாட்டு உச்ச நீதிமன்றம் அவரை பிரதமர் பதவியில் இருந்து இடைநிறுத்தியுள்ளது.

பிரயுத் மேலதிக காலம் பிரதமர் பதவியில் நீடிப்பதாக தாய்லாந்து எதிர்க் கட்சிகள் வழக்குத் தொடுத்துள்ளன.

தாய்லாந்து அரசியலமைப்பின்படி பிரதமர் பதவியில் அதிகபட்சம் எட்டு ஆண்டுகளே இருக்க முடியும். 2014 ஆம் ஆண்டு இராணுவ சதிப்புரட்சியில் ஆட்சியை கைப்பற்றிய பிரயுத் சான் ஓசா பின்னர் 2019ஆம் ஆண்டு இராணுவ அரசின் கீழ் மீண்டும் பதவிக்கு வந்தார்.



இந்த வழக்கு தொடர்பில் இறுதித் தீர்ப்பு இன்னும் வழங்கப்படாத நிலையில், இந்த வழக்கை கருத்தில் கொண்டு பிரயுத் பிரதமர் பதவியில் நீடிப்பதை இடைநிறுத்துவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதமருக்கு எதிரான எதிர்ப்பு வலுத்து வருவதோடு, கடந்த மாதம் அவர் தமக்கு எதிரான நம்பிக்கையில்லா வாக்கெடுபிலும் தப்பினார்.

தலைநகர் பாங்கொக்கில் பாராளுமன்ற கட்டடத்திற்கு வெளியே நேற்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரை பதவி விலகுமாறு கோரினர்.

இதற்கிடையே 77 வயதான துணைப் பிரதமர் பிராவிட் வோங்சுவான் தாய்லாந்தின் இடைக்கால பிரதமராகப் பொறுப்பேற்பார் என்று நம்பப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.